பக்கங்கள்:14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 28 புதன்கிழமை 12.01.2022 கதிர் 68

**இனி இது ரகசியம் அல்ல!**

தமிழ்ப் பேசும் தரப்புகளின் அபிலாஷைகள் – எதிர்பார்ப்புகள் – அடங்கிய பொது ஆவணம் ஒன்றைத் தயாரித்தல், அதனை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் ஒப்படைத்தல் தொடர்பாக அண்மையில் நமது அரசியல் கட்சிகள் பக்கம்02

# சு.க. தலைமையில் ஆட்சி மலரும்



## அடித்துக் கூறுகின்றார் மைத்திரி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் எதிர்காலத்தில் ஆட்சி மலரும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தனிநபரால் நாட்டை நிர்வகிக்க முடியாது. நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேர் இணைந்தால்கூட, மக்களின் ஆசீர்வாதம் இருந்தால் மட்டுமே அரசின் திட்டங்கள் வெற்றியளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய கொழும்பில் நேற்று நடைபெற்ற கட்சி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வியைத் தழுவியது. எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களே 11

# எவரும் வெளியேறலாம்; உள்நுழையலாம்

## பஸில் அதிரடி அறிவிப்பு



அரசை விட்டு எவரும் வெளியேறலாம். அதேபோல் வெளியில் இருந்து எவரும் அரசுடன் இணையலாம். அரசின் கதவுகள் திறந்தே உள்ளன.

– இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். 11

## இடியன் துப்பாக்கி வெடித்ததில் இளைஞர் காயம்; இருவர் கைது



முல்லைத்தீவு, விசுவமடு - பாரதிபுரம் கிராமத்தில் இடியன் துப்பாக்கி வெடித்ததில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குடும்ப உறவி 11

## சட்டத்தரணிகள் சங்க தலைவராக சாலிய



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக 11

## நான்கு வாகனங்களை மோதித் தள்ளியது பஸ்

### சாரதி தப்பியோட்டம்

(மன்னார் நிருபர்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி பொது விளையாட்டு மைதான சந்தியில் பாரிய விபத்துச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

பிரதேச செயலகத் 11



## ஆரியகுளத்தின் உரித்து குறித்து நிரூபிக்கும் ஆவணங்கள் கிட்டின

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.12

ஆரியகுளத்தின் உரித்து யாழ் மாநகரசபைக்கு உரியதுதானா என்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு சந்தேகத்தைக் கிளப்பிய விவகாரம் தொடர்பான ஆவணம் தற்போது வெளி வந்துள்ளது.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தின் உரித்து தொடர்பான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மாநாகர சபையின் ஆணையாளரிடம் எழுத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்துப் பல அரசியல் தலைவர்களும் அதற்குக் கண்டனம் தெரிவித்தனர்.

இதனையடுத்து ஆரியகுளத்தின் பெயரில் அரசியல் செய்ய வேண்டாம் என 11

## குட்டித் தேர்தல் ஒத்திவைப்பு

### ஜே.வி.பியும் கடும் எதிர்ப்பு!

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய காலப்பகுதிக்குள் நடத்துமாறு ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே ஜே.வி.பியின் செயலாளர் டில்வின் சில்வா இந்த வலியுறுத்தை விடுத்தார். 11

## விவாதத்துக்கு வருமாறு மைத்திரிக்கு ரவி சவால்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவைப் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கசவால்விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற 11

# ராஜபக்ஷ குடும்ப அரசுக்கு முடிவுகட்டி புதிய யுகம் நோக்கிப் பயணிப்போம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

நாட்டை அனைத்து வழிகளிலும் சீரழிக்கும் ராஜபக்ஷ குடும்ப அரசுக்கு முடிவுகட்டிப் புதிய யுகம் நோக்கிப் பயணிக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுங்கள்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணம் 11



## தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு

### மூவர் கைது

கொழும்பு 07, பொரளையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிலிருந்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அந்தத் தேவாலயத்தின் பணியாளர் ஒருவர் குறித்த கைக்குண்டை அடையாளம் கண்டு வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் இதனை மீட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையே நடந்த திருவிழா பற்றிய உள்வீட்டுத்தகவல்களையும்செய்திகளையும் முற்கூட்டியே என் பத்தியில் தெரிவித்து வந்தேன். அதனை வாசகர்கள் நன்கறிவர்.

அவற்றின் இடையில் சில ஊகங்களையும், எதிர்வு கூறல்களையும் கூட நான் கோடிக்காட்டியமை வாசகர்களுக்கு நினைவிருக்கக் கூடும்.

★ கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி கொழும்பு குளோபல் டவர் ஹோட்டலில் நடைபெற்ற கூட்டத்தில் மலையகக் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களின் இணக்கத்துடன் ஒரு நகல் வரைவு தயாரிக்கப்பட்டது. அதிலும் விட நீர்த்துப் போன ஆவணத்தில் இலங்கைத் தமிழரசு ஒப்பமிடாது என்று குறிப்பிட்டிருந்தேன். மலையக, முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாட்டுக்கு இடம் கொடுப்பதற்காக அந்த வரைவில் தமிழரசு சில விட்டுக் கொடுப்புகளைச் செய்திருந்தது. அந்த வரைவில் மலையக முஸ்லிம் கட்சிகள் ஒப்பமிட மறுத்து, தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகள் மட்டும்தான் ஒப்பமிடுவது என்று முடிவானால், அந்த வரைவு மீண்டும் மாற்றப்படும், மலையக, முஸ்லிம் கட்சிகளுக்குத் தாங்கள் விட்டுக் கொடுத்த விடயங்களை அதில் மீண்டும் சேர்க்கும்படி தமிழரசுத் தரப்பு வலியுறுத்தும் என்று நான் கோடி காட்டியிருந்தேன்.

ஆனால், மலையக, முஸ்லிம் கட்சிகள் அந்த வரைவில் ஒப்பமிட மறுத்த பின்னரும் அந்த வரைவு அப்படியே தமிழ்க் கட்சிகளினால் ஒப்பமிடப்படுவதாகக் செய்திகள் வெளியாகின. என் ஊகம் – எதிர்வு கூறல் – நடக்கவில்லை என்று சில தரப்புகள் எனக்கே சுட்டிக்காட்டின.

★ இறுதி செய்யப்பட்ட ஆவணத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சித் தலைவர்கள் (மாவை சேனாதிராசா தவிர) ஏனையோர் எல்லாம் ஒப்பமிட்ட பின்னர் அந்த ஆவணம் தொடர்பில் தமிழ்த் தலைவர்கள் எல்லாம் கருத்து வெளியிடாமல் பம்மிக் கொண்டிருக்கின்றனர். அதற்கேனும் காரணம் கட்டாயம் இருக்கும் என்று கோடி காட்டினேன்.

★ இறுதி செய்து, தமிழ்த் தலைவர்கள் ஒப்பமிட்ட ஆவணத்தில், இந்தியப் பிரதமரிடம் தமிழர் தரப்புகள் இறுதியாக முன்வைத்த கோரிக்கை வாசகங்களை மொழி பெயர்த்து அப்படியே என் பத்தியில் பிரசுரித்த நான், அதில் தமிழரின் பூர்வீகத் தாயகம், அதிகாரப் பகிர்வு, சுயநிர்ணய உரிமை, பிரிக்க முடியாத – பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வு என்றெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் முக்கியமான 'சமஷ்டி' என்ற சொல் அதில் கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

– நான் சுட்டிய இந்த மூன்று விடயங்களுமே இப்போது உரிய அவதானிப்பைப் பெற்றிருப்பதாக உறுதி செய்ய முடிந்திருக்கின்றது.

"யுத்தம் முடிந்த பின்னர் தொடர்ந்து வந்த தேர்தல்களில் எல்லாம் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு என்ற தெளிவான ஆணையையே தமிழ் மக்கள் ஒன்று பட்டுத் தந்துள்ளனர்." – என்ற கருத்தில் அமைந்த சொற்றொடரே மேற்படி மலையக மற்றும் முஸ்லிம் தரப்புகளையும் அந்த ஆவணத்தில் ஒப்பமிடச் செய்வதற்காக வரைவு நகலில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

அதனால் தமிழ் மக்களின் ஆணை பற்றிய விவகாரமும் சமஷ்டி பற்றிய வலியுறுத்தலும் அதில் இடம்பெற்றிருக்கவில்லை.

இப்போது, மலையக, முஸ்லிம் கட்சிகள் அந்த ஆவணத்தில் ஒப்பமிட மறுத்த நிலையில், தமிழ் மக்களின் ஆணை, சமஷ்டித் தீர்வு பற்றிய விடயங்கள் இல்லாமல் அந்த ஆவணத்தைத் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளின் நிலைப்பாடாகக் காட்டுவது தவறு என்று ஒரு கருத்தியல் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தகைய தவறுகளுடன் அந்த ஆவணம் வெளிவந்தால் அதை வைத்து கருத்தாயுதம் ஒன்றைச் சுழற்றி அடிப்பதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் அணி தயாராகியிருந்தது என்பதும் அரசல் புரசலாக வெளியான தகவல்.

இந்த ஆவணத்தை ஒட்டி தமிழ்த் தேசியப் பரப்பில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் நிலைப்பாடு தெளிவாக வரையறை செய்யப்பட்டு விட்டது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நிலைப்பாடு தொடர்பான கோடு தெளிவாக வரையப்பட்டு விட்டது. கோட்டுக்கு அந்தப் பக்கம் எல்லாத் தமிழ்க் கட்சிகளும். கோட்டுக்கு இந்தப் பக்கம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும்.

இனி விடயத்துக்கு வருவோம்.

மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிடாத நிலையில் – தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள தலைவர்கள் மட்டும் ஒப்பமிட்ட – 22 ஆம் திகதி வரைவு – குறைபாடுள்ளது, மலையக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களுக்காக நாம் விட்டுக் கொடுத்த வாசகங்கள் மீண்டும் அந்த ஆவணத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்ற நியாயப்படுத்தலோடு நேற்றுமுன்தினம் இரவு சம்பந்தன் ஐயாவை அவர் வீட்டில் சந்தித்தார் சுமந்திரன். விடயங்களை செவிமடுத்த சம்பந்தன் ஐயா, அடுத்த நாள் (அதாவது நேற்று) காலை தம்மை வந்து சந்திக்கும்படி மாவை சேனாதிராசா, செல்வம், சித்தார்த்தன் ஆகியோருக்கு அழைப்பு விடுத்தார். அந்தச் சந்திப்பில் சுமந்திரனும் பங்கு பற்றினார்.

"ஏற்கனவே கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒப்பமிட்டு விட்டனர். அத்தோடு அது வெளியாகியும் விட்டது. இனிமேல் இந்தத் திருத்தங்களை நாம் சேர்க்க வேண்டுமா? அது அவசியமா? இது தொடர்பில் எங்கள் (தமிழர் தரப்பின்) நிலைப்பாடு வெளிப்படையானதுதானே. அதைக் குறிப்பிடுவதற்காக மீண்டும் ஒரு தடவை ஆவணத்தை மாற்றியமைப்பதா?" – என்று கூட்டத்தில் பங்கு பற்றிய ஒரு தலைவர் கூற, சுமந்திரன் சீறினார்.

"தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா ஒப்பமிடும் வரை அது பூர்த்தியான ஆவணம் அல்லவே. அதை வெளியே விட்டவர்கள் யார்? தலைவர்கள் ஒப்பமிட்டுப் பூர்த்தி செய்யப்படாத ஆவணத்தை – இந்தியப் பிரதமருக்கு முகவரியிடப்பட்ட ஆவணத்தை – அவருக்கு அனுப்ப முதல், வெளிநாட்டுத் தூதரகங்கள் சிலவற்றுக்கு அனுப்பியவர் யார்?" – என்று விவரங்களோடு பாய்ந்த சுமந்திரனின் வாதத்தைக் கேட்டு மற்றவர்கள் அசந்து போயினர்.

திருத்தத்துக்கு ஒப்புக் கொண்டனர். அதன்படி திருத்தங்கள் செய்யப்பட்டன. அந்தத் திருத்தங்கள் அடங்கிய புதிய வரைவை, நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றாத நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், என்.ஸ்ரீகாந்தா போன்றோரிடம் சமர்ப்பித்து அவர்களின் கருத்தைப் பெற்ற பின்னர் ஆவணத்தை இறுதிசெய்வது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையில் –

தமிழர் தரப்பு இறுதி செய்து ஒப்பமிட்ட ஆவணத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்புவதற்காக, நேற்று மாலை அதனை இந்தியத் தூதுவரிடம் கையளிக்க ஏற்பாடாகியிருந்ததே, அது என்னவாயிற்று என்ற கேள்வி வாசகர்களுக்கு எழுவது நியாயமானதுதான்.

அந்தக் கடிதத்தை ஒப்படைப்பதற்கு முதலில் 12ஆம் திகதி மாலை நேரத்தைத்தான் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, சம்பந்தன் ஐயாவுக்கு வழங்கியிருந்தார்.

எனினும், 11ஆம் திகதி (நேற்று) நள்ளிரவு அவர் இந்தியா புறப்பட வேண்டியிருந்தமையால் அது ஒரு நாள் முன் போடப்பட்டு 11ஆம் திகதி (நேற்று) மாலை 6.30 மணி எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், புதுடில்லியில் இருந்து கிடைத்த அவசர அழைப்பை அடுத்து இந்தியத் தூதுவரும், பிரதித்தூதுவரும் நேற்றுக் காலையே – திடீர் ஏற்பாடாக – புதுடில்லிக்குப் பறந்து விட்டனர்.

அது, தமிழ்த் தரப்புகளுக்கு வாய்ப்பாகிப்போய் விட்டது. ஆவணத்தை – கடிதத்தை – மீளவும் மாற்றி அமைத்து நேர் சீராக்க, தாராளமாக ஒரு வாரத்துக்கு அதிக கால அவகாசம் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. இந்தியத் தூதுவரும் பிரதித் தூதுவரும் இனி 18ஆம் திகதிக்குப் பின்னர்தான் கொழும்பு திரும்புவர். ஆக, ஆவணத்தை மாற்றி அமைக்க தமிழ்க் கட்சிகளுக்கு தாராளமான கால அவகாசம் தற்செயலாக வந்து கிடைத்து விட்டது.

சீன வெளிவிவகார அமைச்சரின் வருகை, அதனை ஒட்டி சீனத் தூதுவரும், தூதரகமும் வெளியிட்ட அதிகப்பிரசங்கித்தனமான அறிவிப்புகள் ஆகியவற்றை அடுத்தே கொழும்புக்கான இந்தியத் தூதரை கலந்தாலோசனைகளுக்கு அவசர அவசரமாக புதுடில்லி அழைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அந்த விடயத்தை ஒட்டியும் சில விவரங்கள் இனி வெளிவரும். நாம் காத்திருக்கலாம்.

தமிழர் தரப்புகள் ஒன்றுபட்டு ஆவணம் தயாரிப்பது தொடர்பில் என் எதிர்வு கூறல்களின் உள்ளார்ந்தத்தை வாசகர்கள் இப்போது புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன்.

இன்று, இன்னொரு கொசுறுத் தகவலும் உண்டு.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கும் தமிழ்க் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு சுமார் இரண்டரை ஆண்டுகள் நிலுவையில் உள்ளது.

அதுபோல, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்க் கூட்டமைப்புடன் சந்திப்பு நடத்த விடுத்த அழைப்பும், கடைசி நேரத்தில் தள்ளி வைக்கப்பட்டு, கடந்த பல மாதங்களாக நிலுவையில் நிற்கின்றது. அது பெரும்பாலும் இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் இடம்பெறவாய்ப்பு இருப்பதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் சில உள்வீட்டுத் தகவல்களைக் கசிய விட்டன.

இவ்விவகாரத்தில் கொஞ்சம் விடயங்களை ஆழமாக விசாரித்துக் கொண்டு, இரண்டொரு தினங்களில் மேலதிக தகவல்களைப் பெற்று, வாசகர்களுடன் அவற்றைப் பகிர முயல்வேன்.

– மின்னல் –

## தேவாலயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.






காலைக்கதிர் Kalaikkathir

# மரண அறிவித்தல்



## விநாயகமூர்த்தி நீலலோஜனன்

(இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர்)

இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர் விநாயகமூர்த்தி நீலலோஜனன் கொழும்பில் கடந்த ஞாயிறன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.விநாயகமூர்த்தி – கங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும், கொழும்பு றோயல் கல்லூரியின் இளைப்பாறிய விஞ்ஞான ஆசிரியை புஷ்பராணியின் கணவரும், அமரர் ஷயாகுமாரி சிறிகாந்தா (UK), ஷர்ணியகுமாரி விக்னராஜா(uk) ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீகாந்தா (uk), விக்னராஜா(uk), நாகதாசன், காலஞ்சென்ற சிவதாசன், நிர்மலராணி பூலோகசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், நிஷோதா அனுராஜ் (பிரதி அதிபர், Gate Way சர்வதேச பாடசாலை), நிஷாந்தனன் (இலத்திரனியல் பொறியியலாளர் USA) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.அனுராஜ், லோரா மெலன் ஆகியோரின் மாமனாரும், அ.பிரியன் (தரம் 10 Gate Way மாணவன், அ.பூர்ணிமா (தரம் 6, Gate Wayமாணவி) ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை 12ஆம் திகதி காலை 8 மணி முதல் கொழும்பு, பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 2 மணி முதல் இறுதி கிரியைகள் நடைபெற்று, மாலை 4.30 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நிஷோதா (மகள்) - 0777745521**

**தகவல்:குடும்பத்தினர்**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விரியும் சீன ஆதிக்கம்

இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டிய படி சர்வதேச இராஜதந்திரத் தொடர்பாடல்களில் ஆபத்தான சித்து விளையாட்டுப் போக்கைக் கையாள்கின்றது கொழும்பு.

ஒட்டகத்துக்கு இடம் கொடுத்தமை போல இலங்கையில் காலூன்றுவதற்குச் சீனாவுக்கு இடமளிக்கும் கொழும்பு, அதன் மூலம் இந்தியாவை நெருக்கடிக்குள்ளும் விசனத் துக்குள்ளும் தள்ளி நிற்கின்றது.

இந்தப் பிராந்தியத்தின் வல்லரசான இந்தியாவுக்கு இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, அமைதி ஆகியவை தொடர்பில் அதீத கரிசனை உண்டு. அது புரிந்து கொள்ளத் தக்கதே. அது நியாயமானதும் கூட.

இந்தியாவின் சிரத்தைக்கு ஆப்பு வைக்கும் நோக்கில் அதன் தென்கோடி மூலையில் உள்ள சிறிய இலங்கைத் தீவில் சீனா காலூன்றுவதற்குத் தாராளமாக இடமளித்துக் குசும்பு பண்ணுகின்றது கொழும்பு என்பது அப்பட்டமாகி வருகின்றது.

இலங்கையில் சீனா காலூன்றுவது குறுகிய கால நோக்கில் கொழும்பின் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து அது மீளுவதற்கு உதவக் கூடும். ஆனால் நீண்ட கால நோக்கில் இந்தப் பிராந்தியத்தில் தேவையற்ற அமைதியின்மைக்கும், அதனால் நெருக்கடிக்கும், குழப்பத்துக்கும் இந்தப் போக்கு வழி கோலிவிடும் என்பது திண்ணம்.

சீன வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் சந்தித்துத் திரும்பிய பின்னர் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் விடுத்த செய்திக் குறிப்பு சில நெருக்கடி தரும் உண்மைகளை அம்பலப்படுத்தியிருப்பது கவனிக் கத்தக்கதாகும்.

ஒன்று – இலங்கை, சீன உறவில் மூன்றாம் தரப்பு ஏதும் தேவையின்றித் தலையிடக் கூடாது என அது வற்புறுத்தியிருப்பது.

அடுத்தது – சீனாவின் முன் முயற்சியில் இந்த பிராந்திய நாடுகளின் அபிவிருத்திக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் உத்தேசம் பற்றிய அறிவிப்பு.

இவை இரண்டுமே இந்தியாவை இலக்கு வைத்து சீனா நகர்த்தும் தந்திரோபாய நடவடிக்கைகளின் வெளிப்பாடுகள் தான்.

இலங்கையின் வடக்கில் மூன்று தீவுகளில் முன்னெடுக் கப்படவிருந்த தனது மின்சார உற்பத்தித் திட்டங்கள் மூன்றாம் தரப்பு ஒன்றின் பாதுகாப்புக் கரிசனை சர்ச்சையால் மாலை தீவுக்கு மாற்றப்படுவதாகக் கடந்த டிசெம்பரில் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித் திருந்தது.

அந்த மூன்றாம் தரப்பு எதுவென சீனத் தரப்பு திட்டவட்டமாகக் குறிப்பிடாவிட்டாலும் அது இந்தியாதான் என்பது பரகசியமான உண்மை.

இப்போதும் கூட இலங்கை – சீன உறவுகளில் மூன்றாம் தரப்புத் தேவையின்றி மூக்கை நுழைக்கக் கூடாது என்ற சாரப்பட சீனத் தரப்பு சுட்டுவது இந்தியாவைத்தான்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான உத்தேச திட்டம் ஒன்றை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி முன்மொழிந்திருக்கின்றமை தெரிந்ததே. SAGAR ( Security And Growth for All in the Region) என்ற இந்தத் திட்டத்தை ஒத்த ஒரு யோசனையைத் திட்டத்தை தமது கொழும்பு விஜயத்தின் போது கோடி காட்டியிருக்கின்றார் சீன வெளிவிவகார அமைச்சர்.

“இந்து சமுத்திரத் தீவு நாடுகள் பலவற்றுக்கு நான் மேற்கொண்ட விஜயத்தில் அவை எல்லாவற்றுக்கும் ஒரே மாதிரியான நெருக்கடிகள் இருப்பதை அவதானித்தேன். அபிவிருத்தி தொடர்பான அந்தந்த நாடுகள் அனைத்தினதும் பொதுவான இலக்கை அடைவதற்காக இந்து சமுத்திர தீவு நாடுகளின் அபிவிருத்திக்கான கட்டமைப்பு ஒன்றைப் பொது உடன்பாட்டில் நாம் அமைப்பது பொருத்தமானது” – என்று சீன அமைச்சர் கூறியிருக்கின்றார்.

இவை இலங்கை உட்பட இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் இந்தியாவுக்குப் போட்டியாகத் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த சீன துணிந்துவிட்டமையே காட்டுகின்றது. சீனாவின் இந்த நயவஞ்சகத் திட்டத்துக்கு கொழும்பு துணை போவதுதான் முட்டாள்தனமான இராஜதந்திரமாகும்.

# அரசாங்கத்தின் ஜனநாயகத் தோல்வியே உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைப்பு

## வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவிப்பு



அரசாங்கத்தின் ஜனநாயகத் தோல்வியே தேர்தல் ஒத்திவைப்பு என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும் ரெலோப் பிரமுகருமான சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:

ஆளும் அரசாங்கத்தின் ஜனநாயகத் தோல்வியே நாடு முழுவதிற்குமான உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் கால நீடிப்பு. உண்மையாக மக்கள் மத்தியில் ஒரு ஜனநாயகத் தேர்தலை எதிர்கொள்ள முடியாது தோல்வி அடைந்து விடுவோம் என்ற அச்சமே ஒத்திவைப்புக்குகான பிரதான காரணம்.

கொரோனா அச்சத்தின் மத்தியில் நாடாளுமன்ற தேர்தலை நடத்திய ஜனாதிபதி, தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு கொரோனா அச்ச நிலை ஓரளவு சாதாரண நிலையை அடைந்த நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் காலம் முடிவடையும் நிலையில் அதன் ஆயுள் காலத்தை நீடிக்கும் வர்த்தமானியை வெளியிட்டார் என்றால் அவர்களால் தேர்தலை எதிர் கொள்ளக் கூடிய சூழ்நிலை இல்லை என்பது. அந் நடவடிக்கை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளது. வாக்களிக்க வரிசையில் நின்ற மக்களை சாப்பாட்டிற்கு வரிசையில் நிற்க விட்ட சாதனையின் அறுவடையை இனி வரும் தேர்தலில் பெற வேண்டி வரும் என்ற தெளிவு ஆட்சியாளர்களுக்குப் புரியும் அந்தப் புரிதலின் முடிவு தேர்தல் ஒத்திவைப்பு.

2024 ஆண்டு வரை தேர்தல் ஒன்றை எதிர் கொள்ள தற்போதைய ஆட்சியாளர்களினால் முடியாத நிலைமை உருவாகி விட்டது எனப் பல தரப்பும் கூறி வருகின்ற நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறுவது போல மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் நடாத்தப்படாது ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களை சர்வசன வாக்கெடுப்பு மூலம் தற்போதைய அரசாங்கம் கால நீடிப்பு செய்ய முயற்சிக்கலாம் என கூறுகின்றனர்.

அன்று ஜே.ஆர். செய்த மாதிரி இன்றைய ஜி.ஆர். (கோட்டாபய ராஜபக்ஷ) செய்வதற்கான வாய்ப்புக்கள் எதிர்காலத்தில் நிகழ்வதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளது.

# மக்களின் வாழ்வாதாரத்துக்கு இடையூறின்றி மின்சாரப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்க!

## ஜனாதிபதி கோட்டா கோரிக்கை



மக்களின் வாழ்வாதாரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் மின்சார நெருக்கடிக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மின்வெட்டுத் தொடர்பான நிலைமைகள் தொடர்பில் மின்சாரம் மற்றும் எரிசக்தி துறைகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நிலக்கரி மற்றும் எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையிடம் உள்ள நிலக்கரி கையிருப்பு மின்சார நெருக்கடியின்றி நிர்வகிப்பதற்குப் போதுமானது எனவும், எரிபொருளில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை நிர்வகிப்பதன் மூலம் மின்வெட்டைத் தவிர்க்க முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமையைச் சமாளித்து மக்களின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே, மின்வெட்டு இன்றிச் செயற்படுவதே தற்போதைய நோக்கமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எப்படியிருப்பினும் தேவை ஏற்பட்டால் மின்வெட்டு ஏற்படும் எனக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்குள் ஆழ ஊடுருவிய இலங்கை புலனாய்வாளர்கள்

இலங்கை ஜனாதிபதி இராணுவத்தினரை அனைத்து துறைகளிலும் வைத்துள்ளமையானது தமிழ் மக்களுக்கான அடக்குமுறை ஒருபுறமிருக்க, எதிர்காலத்தில் தமது இராணுவமே அரசுக்கு எதிராக திசை திரும்பக்கூடிய நிலை ஏற்படும் என்ற அச்சமே பின்னணியில் இருக்க முடியும் என பிரித்தானியாவின் வேல்சில் இருக்கக்கூடிய கலாநிதி பிரபாகரன் (அரூஸ்) தெரிவித்துள்ளார்.

சமூக மட்டத்தில் இராணுவம் தொடர்பில் தொக்கி நிற்கும் கேள்விகள் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பூகோள அரசியலில் சிக்குப்பட்ட இலங்கை பல நாடுகளின் அழுத்தத்தின் கீழ் காணப்படுகின்றது. இதன் காரணமாக இலங்கைத் தலைவர் அனைவரையும் பார்த்தும் பயப்படும் நிலையிலேயே உள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

எனவே, எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் உடைந்து விழும் போது இங்குள்ள படைத்தளபதிகளை எந்த நாடும் ஆட்சியை தூக்கி எறிவதற்காக பயன்படுத்தி விடும் என்று தற்போது சவேந்திர சில்வா மீதான பயத்தில் ஜனாதிபதி உள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது பொருளாதாரத்தில் கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. மின் உற்பத்திக்கான எண்ணெயைக் கப்பலில் இருந்து இறக்குமதி செய்ய முடியாத கடும் நெருக்கடியைச் சந்தித்து தற்போது இலங்கை இருளில் மூழ்கியுள்ளது.

அதாவது தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய பதவியேற்ற பின்னர் 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இராணுவத்தினரிலேயே 37 துறைகளில் இராணுவத்தினரை நியமித்துள்ளதுடன், முக்கியமான மூன்று துறைகளுக்கும் ஓய்வுபெற்ற அராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளார். இந்தச் செயற்பாட்டுக்கு பல நாடுகளும் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

# மிளகாய் ஏற்றுமதிக்கான கடனை மீள செலுத்தாதமையால் சிக்கல்!

## இந்திய விநியோகஸ்தர்கள் தெரிவிப்பு

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, இந்தியாவில் இருந்து மிளகாய் ஏற்றுமதி செய்பவர்களை கடும் சிக்கலில் தள்ளியுள்ளது.

இலங்கையில் மிளகாய் இறக்குமதியாளர்கள் கடந்த பல மாதங்களாக இந்திய வர்த்தகர்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தாதமையால் அங்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து ஏற்றுமதியாளர்களுக்கு இந்திய மதிப்பில் 250-300 கோடி ரூபாவுக்கு மேல் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடனைச் செலுத்தாதது குறித்து இதுவரை முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை என ஆதாரங்களை மேற்கோளிட்டு இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவ்வாறு முறைப்பாடு தெரிவித்தால் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைக்காமல் போய்விடலாம் எனவும் விநியோகஸ்தர்கள் அஞ்சுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரஸ்பர பேச்சு மூலம் நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும் என நம்புவதாகத் தெரிவித்துள்ள அவர்கள் தேவைப்பட்டால், வெளிவிவகார அமைச்சின் ஆதரவை நாடவுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

முக்கியமாக ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து இந்திய மிளகாய்ப் பங்குகளை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# மேலும் 149 பேர் பூரண குணம்!

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மேலும் 149 பேர் பூரணமாகக் குணமடைந்த வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய, கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 67 ஆயிரத்து 226 ஆக அதிகரித்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கடந்த திங்கட்கிழமை மேலும் 461 பேருக்குக் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் புதுவருட கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் அடங்குகின்றனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள கொவிட் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 92 ஆயிரத்து 128 ஆக அதிகரித்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் மேலும் 15 கொவிட் மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, இலங்கையில் இதுவரை பதிவான மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 15,134 ஆக பதிவாகியுள்ளது.

# எந்த நேரத்திலும் அரசிலிருந்து விலகுவதற்கு நாங்கள் தயார்!

## லசந்த அழகியவன்ன அதிரடி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு முடிவு ஒன்றை எடுத்தால், எந்த நேரத்திலும் அரசாங்கத்தில் இருந்து விலக தமது அணியினர் தயாராக இருப்பதாக நுகர்வோர் விவகார ராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே ராஜாங்க அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

நாங்கள் எப்போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே இருக்கின்றோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது அந்த கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல. கட்சியில் நிறைவேற்றுச் சபை, மத்திய செயற்குழு என்பன இருக்கின்றன.

மத்திய செயற்குழு எடுக்கும் எந்த முடிவாக இருந்தாலும் நாங்கள் அதற்கு கட்டுப்படுவோம். இதனையே நான் மூன்று மாதங்களுக்கு முன்னர் மத்திய செயற்குழுவில் முன்வைத்தேன்.

எனினும் நாங்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கோ, சஜித் பிரேமதாஸவிற்கு பின்னாலோ செல்ல மாட்டோம். அதேபோல், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் செல்ல மாட்டோம்.

நாங்கள் ஸ்ரீணலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே இருப்போம்.

எனினும் தற்போது துரதிஷ்டவசமாக மக்கள் விடுதலை முன்னணி, சரத் பொன்சேகா, பொதுஜன பெரமுன போன்ற தரப்பினரின் விமர் சனங்களுக்கு கட்சி உள்ளாகியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இவர்களின் விமர் சனங்களுக்கு உள்ளாகும் நிலைமைக்குச் சென்றுள்ளது.

எவரது விமர்சனங்களுக்கு உள்ளாகும் தேவை எமக்கில்லை. அவற்றை நாங்கள் கவனத்திலும் கொள்வதில்லை. எமது கட்சிக்குத் தனியான கொள்கை, நிலைப்பாடுகள் உள்ளன எனவும் லசந்த அழகியவண்ண குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் உதய கம்மன்பில வெளிநாடு செல்ல அனுமதி



ஆஸ்திரேலிய வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்குகளை விற்பனை செய்து 20 கோடி ரூபாவை மோசடியான முறையில் பயன்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக நீக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உதய கம்மன்பில தனது சட்டத்தரணிகள் ஊடாக முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பிரதிவாதியான அமைச்சர் சார்பில் ஆஜரான சட்டத் தரணி, தனது கட்சிக்காரர் இரண்டு தனிப்பட்ட விஜ யங்கள் மற்றும் இரண்டு உத்தியோகபூர்வ விஜயங்களுக்காக வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதாக நீதிமன்றத்துக்கு அறிவித்தார். இதன்படி ஜனவரி 23 ஆம் திகதி முதல் ஏப்ரல் 29 ஆம் திகதி வரை தனது கட்சிக்காரருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடையை நீக்குமாறு சட்டத் தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைக் கருத்திற்கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதி, பிரதிவாதி கம்மன்பிலவுக்கு குறித்த காலப் பகுதியில் விதிக்கப்பட்ட பயணத் தடையை நீக்கியதுடன் நீதிமன்றப் பாதுகாப்பில் இருந்த அவரது கடவுச்சீட்டைத் தற்காலிகமாக விடுவிக்கவும் உத்தரவிட்டார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது அமைச்சர் உதய கம்மன்பில ஆஸ்திரேலிய வர்த்தகர் பிரையன் ட்ரிக் என்பவருக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்குகளைப் போலியாகர் தயாரித்து விற்பனை செய்து 2 கோடி; ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தினர் எனத் சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் 100 ஐ அண்மிக்கின்றது ஒமிக்ரோன் தொற்றாளர் எண்ணிக்கை

இலங்கையில் ஒமிக்ரோன் திரிவுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை 100 ஐ அண்மித்துள்ளதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மக்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும் என சுகாதார அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த சில வாரங்களாகக் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றபோதும், ஒமிக்ரோன் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஒமிக்ரோன் திரிவு மிக வேகமாகப் பரவக்கூடியது என்பதால், பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் முறையாகச் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாவிட்டால், இது பேராபத்தை ஏற்படுத்தும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தற்கொலைக்கு முயன்ற மாணவனுக்கு எதிராக சாவகச்சேரியில் வழக்கு தாக்கு!

மாமன் கண்டித்ததால் தற்கொலைக்கு முயன்ற மாணவனுக்கு எதிராக பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவை வருமாறு -

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய மாணவன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பட்டாசு வெடிகளை வாங்கி வெடிக்க வைத்துள்ளார். அதனைக் கண்ணுற்ற மாணவனின் மாமன் மாணவனைக் கண்டித்துள்ளார்.

அதனால் ஆத்திரமுற்ற மாணவன் தோட்டத்துக்குச் சென்று கிருமி நாசினியை எடுத்து அருந்தி உள்ளார். அதனை அறிந்த குடும்பத்தினர் மாணவனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவன் தற்போது தேறி வரும் நிலையில் , தற்கொலைக்கு முயன்றமைக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சீனாவின் கறுப்பு பட்டியலிலிருந்து இலங்கை மக்கள் வங்கி நீக்கம்

இலங்கை மக்கள் வங்கியை கறுப்பு பட்டியலில் இருந்து சீன தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக செயலகம் நீக்கியுள்ளது. கடந்த 2021 ஒக்ரோபர் 29 ஆம் திகதி ஒப்பந்தத்தை மீறியமையால் இலங்கை மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இணைத்தது.

கடன் பத்திரத்துக்கு அமைய குறித்த கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதாக சீனத் தூதரகத்துக்கு மக்கள் வங்கி அறிவித்திருந்தது. அத்தோடு குறித்த கறுப்புப்பட்டியலில் இருந்து தம்மை நீக்கிக்கொள்ள எதிர்பார்ப்பதாக மக்கள் வங்கி குறிப்பிட்டிருந்தது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 249

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**640.ஏற்பட்ட இடர்கள் என்ன?**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதும் அவர்களது புனர்வாழ்வுக்கு ஆதரவாக இருப்பதும் இடர்கள் தரும் என்று நினைக்கவில்லை. ஆனால் காலங்கள் அது தமிழ் மக்களுக்கானது என்பதில் அதிகாரச் சிக்கல்கள் பல எழுந்தன. அவை ஓரளவில் சமாளிக்கப்பட்டு நிதியம் இயங்கிக் கொண்டிருந்தது. நிதியத்தோடு இணைந்து பணியாற்றிய இளைஞர்களின் தொடர்புகளாலும் சன்சோனி ஆணைக்குழுவின் முன் நெறிப்படுத்தப்பட்ட சாட்சியங்களாலும் பாதுகாப்புப் படையினராலும் புலன் விசாரணையாளராலும் பல இடர்கள் ஏற்பட்டன. காந்தீயத்தின் பிதா மகர்களான டாக்டர் ராஜசுந்தரமும் டேவிட் ஐயாவும் கைது செய்யப்பட்டனர். எங்களுக்கும் வலை விரிக்கப்பட்டது. இதனால் நிதியத்தின் காரியதரிசி கந்தசாமி நாட்டைவிட்டு லண்டனுக்குச் சென்று அகதியானார். நான், மண்டூர் மகேந்திரன், பொருளாளர் வி.எஸ். துரைராஜா நான்காம் மாடியில் விசாரணைகளில் புதைந்திருந்தோம். ஆனால் அவற்றின் நடுவில் 1983 இல் கலவரம் நடந்ததனால் எங்களுக்கெதிரான விசாரணைகளின் வலு சற்றுத் தணிந்து, நாங்கள் அகதி முகாம்களில் பணியாற்றி, காலம் கடத்தி, பின் நானும் துரைராஜாவும் வெளியேறினோம்.

நான் அங்கிருந்து புறப்பட்டது சுவாரஸ்யமானது. ஆனால் அவற்றை விட்டுவிடுவோம். அந்த வெளியேற்றத்தில் லண்டனுக்குப் போய் கந்தசாமியையும் மற்றவர்களையும் சந்தித்து, சென்னை வந்து, அங்கும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு, பின் ஆஸ்திரேலியா வந்து சேர்ந்தேன். இவை ஜூன், ஜூலை, ஒகஸ்ட் 1984 காலப்பகுதியில் நடந்தவை. கந்தசாமி, நான், துரைராஜா மூவரும் நிதியத்தில் பொறுப்பான பதவிகளில் இருந்தாலும், வெளியேறியதால் அவற்றிலிருந்து விலகி அவற்றை மற்றவர்கள் கவனித்து வந்தனர். எங்களது மரியாதையின் உறவுகளேயொழிய நியமிக்கப்பட்ட பொறுப்புகள் இருக்கவில்லை.

கே.எஸி. நித்தியானந்தா, கந்தசாமி, நான் தொடர்ந்த ஈடுபாடுகளால் நிதியத்தின் அத்திபாரங்களாகவே அதனை நடத்திக் கொண்டிருந்தோர் பார்த்தனர்.


மற்ற இடர்கள் தமிழ் பரப்புக்களிலே இருந்துவந்தன. அவை லண்டனிலிருந்து இயங்கிய ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதிகளிடமிருந்து வந்தன.

அவர்கள் 1977 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்காவிலும் கால் பதித்து இயங்குவதற்காக சில அங்கத்தினர்களை அனுப்பி நாட்டிலும் சிலரைச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இடதுசாரி சிந்தனையாளர்கள் என்பதாலும், மார்க்ஸீய வாதிகளானதாலும் இடதுசாரி சார்புள்ள கே.எஸி.நித்தியானந்தாவுடன் நல்ல உறவுகளைப் பேணினார்கள்.

கன்னாட்டியில் அவர்கள் பண்ணை முகாம் ஒன்றை நடத்தினர். அது பாதுகாப்பு படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு 12 பேர் கைது செய்யப்பட்டு, இந்த போராளிகள் 'பயங்கரவாதிகளாக' சித்திரிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் டாங்கிகள், ட்ரக்குகளில் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு படையினர் சகிதம் வவுனியாவில் ஊர்வலம் வைத்து, அங்குள்ள நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். நிதியத்தை அந்த வழக்குக்கு உதவி செய்யுமாறு கோரப்பட்டாலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

கே.எஸி. நித்தியானந்தவினதும் பிடிக்கப்பட்டிருந்த போராளிகளின் லண்டன் உறவுகளினதும் வேண்டுதலிலும் சட்டத்தரணியாக நான் இயங்கி கொழும்பிலிருந்து ஏர்ட்லி பெரேராவை நியமித்து அந்த வழக்கை வென்றோம்.

குட்டிமணி, தங்கதுரையை கான்ஸ்டபிள் சிவநேசனின் கொலைக்காகக் குற்றம் சாட்டி, பின் அவர்களது வாக்குமூலங்களைப் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் குற்ற ஒப்பியலுக்குப் பாவித்தார்கள். இந்த வழக்கு நேரடியாகவே அவர்களைப் பயங்கரவாதிகளாக குற்றம் சாட்டியிருந்தது. இந்தச் சின்ன இடர்களால் ஈரோஸ் இயக்கத்தினர் கந்தசாமியை தங்களுக்கு ஆதரவானவராகவோ, அனுசரணையானவராகவோ பார்க்கவில்லை. நான் இடதுசாரி கொள்கைகளில் அறியப்பட்டவன் அல்லன். என்றாலும் ஏதோஎன்னுடன் சேர்ந்து வேலை செய்யலாம் என்ற எண்ணப்பாங்கு அவர்களுக்கு இருந்தது. 1979 ஆம் ஆண்டு நான் லண்டனுக்குப் பயணமானபோது விடுதலைப் புலிகளுக்கும் ஈரோஸிற்கும் இருந்த பணப்பரிவர்த்தனை ஒன்றைக் கவனிக்க வேண்டியிருந்தது. அத்தோடு கே.எஸி. நித்தியானந்தாவும் ஈரோஸை சந்தித்து நிதியத்தை ஒட்டிய அவர்களது ஆதங்கங்களைக் கலந்துரையாடி வருமாறு கேட்டிருந்தார்.



கே.எஸி.நித்தியானந்தா

**641.அப்படியான சந்திப்புக்கள் நடைபெற்றனவா?**

அப்படியான பல சந்திப்புக்கள் நடைபெற்றன. தமிழ் அகதிகள் புனர்வாழ்விற்கான பிரித்தானியாவின் மத்திய நிதியத்தையும் நிறுவுவதற்கு விரும்பியிருந்ததால் அதற்கும் அவர்களது ஆதரவையும் கோரியிருந்தேன். அதற்கு அனுசரணைகள் தந்தார்கள் என்றாலும், அவர்களது பார்வை, நான், கந்தசாமி போன்றோர் முற்றான இனவாதப் போக்கில் வட கிழக்கில் தமிழ் மக்களுக்கான அரசியல் சித்தாந்தத்தில் உதவிகளும் புனர்வாழ்வுகளும் செய்ய விரும்புகிறோம், நிதியத்தின் திட்டங்கள் மலையகத் தமிழரை உள்ளடக்கியவையாக இல்லை, சுதந்திரமடைந்த காலங்களிலிருந்து இந்த மக்கள் லயன் காம்பராவில்தான் வாழ்கிறார்கள், அவர்களுக்கு உதவியான திட்டங்கள் தமிழ் மக்கள் ஏற்படுத்தியதில்லை, ஆகவே அவர்களையும் இணைத்த திட்டங்களில் நிதியம் ஈடுபட வேண்டும், மலையக மக்களும் இணைய வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களது ஈழ வரைபடத்தில் பதுளை பிரதேசத்தையும் மட்டக்களப்புடன் இணைத்திருந்தனர்.

நிதியத்தின் எண்ணப்போக்குகளையும் அதன் பணிகளையும் பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளியினர் வட, கிழக்குப் பகுதிகளில் ஆதரிக்கப்படுவதையும் விளக்கினேன். ஆனாலும் நாம் ஓர் அரசியல் நோக்கில் ஓர் இடதுசாரி புரட்சியை நோக்கிப் போகவில்லை என்பதையும் தெளிவு படுத்தினேன். இரத்தினசபாபதி, சங்கர் ராஜி, நித்தியானந்தன் நவசோதி போன்று என்னிடம் பேசிய தலைவர்களின் அபிப்பிராயங்களில் அவர்கள் கந்தசாமியில் நம்பிக்கை கொண்டவர்களாக இல்லை என்பது புரிந்தது. நிதியத்தில் அவர் ஆளுமை மிக்கவராக இருக்கும் வரை அதனுடன் இயங்குவது கடினம் என்ற அபிப்பிராயமே அவர்களிடம் இருந்தது. நான் திரும்பி வந்தபோது இவற்றைக் கந்தசாமிக்கும் நித்தியானந்தாவிற்கும் தெளிவுபடுத்தினேன். அதன் பின் சில மாதங்களில் நித்தி காலமானார். கந்தசாமி நிதியத்தில் பணியாற்றினார். அவரோடு ஈரோஸின் தர்க்கங்களும் தொடர்ந்தன.

**642.இவைதான் 1989இல் அவர் காணாமலாக்கப்பட்டமைக்குக் காரணிகளாயின?**

அவற்றில் பெரும்பகுதி இருந்தாலும், விடுதலை இயக்கங்களின் வளர்ச்சியுற, அவர்கள் எல்லோருமே நிதியம், அது போன்ற நிவாரணப் பணிகளுக்காக வந்து சேரும் நிதிகள், தமிழ் மக்களுக்கானவை, ஆகவே அவை நிதிகள், தமிழ் மக்களுக்கானவை, எனவே அவை தமது குத்தகைக் காசு என்ற மனப்பான்மையில் அதிகாரம் செலுத்தத் தொடங்கின. துப்பாக்கிக் கலசாரத்தில் இப்போக்குக்குத் தாக்குபிடிப்பதும் கஷ்டமாக இருந்தது. 1984இல் லண்டன் சென்ற போது, அங்கிருந்த நெருடல்களையும் நாட்டின் நிலைமைகளையும் பற்றி கலந்தாலோசித்தோம். விடுதலை போராளிகள் தான், இவற்றைக் கட்டுப்படுத்தி நடத்தப் போகின்றார்களென்றால், நாங்கள் அதனை மூடிவிட்டு அவர்கள் தாங்களாகவே இவற்றை தொடக்கிசெய்யட்டும் என்ற மனப்பாங்கை அவர் தெரிவித்தார். விடுதலை புலிகள் கூட, அந்த பணத்தில் தாம் ஆதிக்கம் வேண்டும் என்றும், அப்படியான அனுசரணைகள் இல்லாதவிடத்து நாட்டிலும் அது இயங்குவதைத் தடை செய்ய யோசிக்கப்படும் என்றும் சொன்னதாக அவர் கூறினார்.

இந்த காலகட்டத்தில் கண்ட, நடந்த முக்கியமான ஒன்றிரண்டை சொல்லி, 1987 ஒப்பந்த காலத்துக்கு வருகிறேன்.

டாக்டர் நடேசன் சென்னையில் 1984 காலங்களில் சேர்ந்து இயங்கிய தமிழர் நல மருத்துவ நிறுவனம் (MUST) என்பதை பற்றி முன்னர் கூறியிருக்கிறேன். அந்த நாள்களில் நடேசனை நான் அறிந்திருக்கவில்லை. இதை அமைப்பதில் முனைப்பு காட்டியவர் டக்ளஸ் தேவானந்தா.

அப்பொழுது பத்மநாபாவின் ஊக்கத்தில் ENLF என்ற கூட்டணி ஆயுத இயக்கங்களான ரெலோ, ஈரோஸ் மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) என்ற மூன்றையும் சேர்த்து உருவாகியிருந்தது. இவர்களுடன் பின் நாள்களில் விடுதலை புலிகளும் இணைந்து கொண்டார்கள். புளொட் இயக்கம் அதில் சேர்ந்து கொள்வதைத் தடுக்கும் கண்ணோட்டத்திலேயே விடுதலைப் புலிகள் இதில் சேர்ந்ததாகக் கூறப்பட்டது.

ஒரு மருத்துவமனையின் தேவையை எல்லா இயக்கத்தினரும் அறிந்திருந்தமையால் அதில், தலைவராக விடுதலைப்புலிகள் சார்பில் டாக்டர் ஜெயகுலராஜா தெரிவானார். உபதலைவராக, வெலிக்கடை சிறையில் 1983இல் கொல்லப்பட்ட டாக்டர் இராஜசுந்தரத்தின் மனைவி சாந்தி தெரிவு செய்யப்பட்டார். சென்னைக்கு போகும் காலங்களில் சாந்தி இராஜசுந்தரத்தை சந்தித்து நடப்பவை பற்றி அறிவது வழக்கம். ஒற்றுமையாக இயங்கிய இந்த மருத்துவப் பணிக்கு புலம்பெயரில் இருந்து பல உதவிகள் சென்று சேர்ந்தன. தமிழர் புனர்வாழ்வு நிதியம் கூட இந்திய அகதிகள் முகாம்களிலிருந்த அகதிகளுக்கான மருத்துவ நிதிக்கு என்றும் உதவிகள் சேர்த்துத் தந்தது.

ஆனால் விடுதலை புலிகளின் பிரதிநிதியாக, மருத்துவநிதியத்தின் தலைவராக இருந்த டாக்டர் ஜெயகுலராஜா, எதுவித அறிவிப்புகளுமின்றி அவர்களோடு அவர்களோடு இயங்குவதை தவிர்த்து கொண்டார். இது 1986 இல் கடைப்பகுதி என்ற ஞாபகம். பின் தமிழ் அகதிகள் நிறுவனம் Tamil Refugees Organization-TRO என்பது விடுதலை புலிகளால் நிறுவப்பட்டு, டாக்டர் ஜெயகுலராஜா அதன் தலைவராக இயங்கினார். தமிழ் நாட்டில் விடுதலை புலிகள் ஆளுமை செலுத்திய முகாம்களில் தாங்களே மருத்துவ உதவிகளைச் செய்வோம் என்றும், மருத்துவ நிதியம் அங்கு அனுகுவது தடை செய்யப்பட்டது. நாட்டிலும் புலம்பெயரிலும் தமிழ் அகதிகள் நிறுவனம் விடுதலை புலிகளால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக அறிவிக்கப்பட்டு, அவர்களது தொண்டர்கள் சேர்த்த நிதிகள் அவர்களது வைப்பிலிடப்பட்டு, செலவழிக்கப்பட்டது. சர்வதேச நிதி நிறுவனங்களிடையே இந்தப் பெயர்கள் ஏற்படுத்திய சிக்கல்கள் இருந்தன. தமிழ் மக்களின் பெயரால் பெறப்படும் தொகைகளுக்கு உரித்தானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பது தெளிவாக தெரிவிக்கப்பட்டது.

இடையே நாட்டில் இந்திய ஒப்பந்தம் 1987இல் ஏற்படுத்தப்பட்டு, இந்திய படைகளும் காலூன்றியிருந்தன. இந்தியா மீள்கட்டமைப்புக்களுக்குத் தருவதற்கென பொருந்திக் கொண்ட நிதிகளும், ஒரு சமாதான சூழ்நிலை ஏற்படுகிறது என சர்வதேச நிதியங்கள் தரவிரும்பியவையும் யார் கட்டுப்பாட்டில் இருப்பது என்ற போட்டிகள் விடுதலைக் குழுக்களிடையே எழுந்தன.

(வளரும்)

# நாட்டை நாசம் செய்வதற்காகவே சீன அமைச்சர்கள் வருகின்றார்கள்

## சரத்பொன்சேகா காட்டம்



சீன அமைச்சர்களுக்கு வேறு வேலையில்லை, நாட்டை நாசம் செய்யவே வருகின்றார்கள் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

சீன அமைச்சர்களுக்கு அந்நாட்டில் வேலையில்லை. மாதத்துக்கு ஒருமுறை எவராவது சீனாவிலிருந்து இலங்கைக்கு வருகின்றார். பெரிய நாடான சீனாவிலிருந்து கொண்டு இலங்கைக்கு ஏன் இவர்கள் வந்து திரிகின்றார்கள் எனத் தெரியவில்லை.

சீனாவின் வெளி விவகார அமைச்சரை வரவேற்பதற்கு இலங்கையின் வெளி விவகார அமைச்சர் செல்லவில்லை. மாறாக விளையாட்டுத்துறை அமைச்சரே சென்றார். இதற்குக் காரணம் தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களே.

தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காகவே சீனாவின் அமைச்சர்கள் இலங்கைக்கு வருகிறார்கள். யார் வந்தாலும், யார் வரவேற்றாலும் இலங்கையின் மேலுள்ள அன்பால் அவர்கள் எவரும் வரவில்லை. எஞ்சியிருப்பதையும் நாசம் செய்யவே இவர்களை இலங்கைக்கு அழைத்து வருகின்றார்கள்.

நாம் அந்த ஆட்சியிலிருந்தோம். ஆனாலும் தவறுகளுக்குப் பொறுப்புக்கூற முடியாது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெறும்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எம்மிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி இடம்பெறும் போது அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்களிடம் ஆலோசனைகளைக் கேட்டா செயற்பட்டார் எனவும் அவர் இதன்போது வினவியுள்ளார்.

# நாளாந்தம் 12 மணி நேரம் மின்வெட்டு ஏற்படும் அபாயம்

## சம்பிக்க ரணவக்க ஆரூடம்



இலங்கை மின்சாரத்துறை பாரிய நெருக்கடியை நோக்கிச் செல்லும் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க எச்சரித்துள்ளார்.

அடுத்த மாத இறுதிக்குள் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்படவுள்ள மின் நெருக்கடி தொடர்பில் தான் ஆறு வாரங்களுக்கு முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தார் என அவர் கூறியுள்ளார்.

தற்போதைய நிலையில் 1 முதல் 3 மணித்தியாலங்கள் வரை ஏற்படுத்தப்படும் மின்தடை, எதிர்வரும் நாள்களில் 12 மணித்தியாலங்களாக மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த நெருக்கடியான நிலைமையை நிர்வகிக்க அரசாங்கத்திடம் எந்த திட்டமும் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# மரக்கறிகளின் விலைகள் நுவரெலியாவில் வீழ்ச்சி!

உரப் பிரச்சினை, வெள்ள அனர்த்தம் காரணமாக கடந்த சில மாதங்களாக நாட்டில் மரக்கறிகளின் மொத்த விற்பனை விலைகள் கடுமையாக உயர்ந்திருந்தன.

இந்நிலையில், நுவரெலியாவில் மரக்கறி விலை ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலம் நிறைவடைந்துள்ள நிலையில், நுவரெலியாவில் மரக்கறி விலை ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்துள்ளது எனவும், விவசாயிகளின் கொள்வனவு விலையும் குறைந்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஒரு கிலோ முட்டை கோஸ் 165 ரூபாவாகவும், ஒரு கிலோ கரட் 295 ரூபாவாகவும், ஒரு கிலோ வெண்டைக்காய் 165 ரூபாவாகவும், ஒரு கிலோ முள்ளங்கி 85 ரூபாவாகவும், ஒரு கிலோ பீட்ரூட் 195 ரூபாவாகவும் மற்றும் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 260 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோ லீன்ஸ் 270 ரூபா, ஒரு கிலோ குடைமிளகாய் 1,300 ரூபா, ஒரு கிலோ ப்ரோக்கோலி 2,300 ரூபா, ஒரு கிலோ சிவப்பு முள்ளங்கி 1,200 ரூபாக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

# இரு சிறுவர்கள்மீது பாலியல் தொந்தரவு முல்லைத்தீவுப் பகுதி இளைஞர் கைது!

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட ஹிச்சிராபுரம் பகுதியில் இரு சிறுவர்கள் மீது பாலியல் தொந்தரவு கொடுத்த இளைஞன் ஒருவரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹிச்சிராபுரத்தினை சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் ஒருவர் இரண்டு சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோக முயற்சி செய்துள்ளமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய முள்ளியவளை பொலிஸாரல் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இவ்வாறான பாலியல் துஷ்பிரயோகங்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றமை கவலையளிக்கும் விடயமாகக் காணப்படுகின்றது.

எனவே, பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வலி.மேற்கு பிரதேசத்துக்குள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை!

## மக்களுக்கு பிரதேசசபை முக்கிய அறிவிப்பு

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமையால் இன்றைய நாளிலிருந்து அடுத்து வரும் நாள்களில் உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட உள்ளமையால் உங்கள் பகுதியில் உள்ள தேவையற்ற பொருள்களை உடனடியாக அகற்றுங்கள் என வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

நீரோந்து பொருள்களான தகரங்கள், பேணிகள், சிரட்டைகள், பழைய ரயர்கள், வெற்றுப்போத்தல்கள் மற்றும் இளநீர் கோம்பைகள் போன்ற பொருள்களை உடனடியாக அகற்றி டெங்கு நுளம்பு பெருகுவதைக் கட்டுப்படுத்துமாறு அவர்கள் கூறுகின்றனர்.

நீரேந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ள விசேட வாகன ஏற்பாடுகள் பிரதேசசபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க தவறும் பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட உள்ளன எனவும் குறிப்பிடுகின்றனர்.

இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம் என வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# எரிவாயு தட்டுப்பாட்டின் விளைவு: விறகு விலையால் மக்கள் கஷ்டம்

சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைத் தொடர்ந்து விறகு, மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கும் நுவரெலியாவில் பாரிய தட்டுப்பாடுகள் நிலவி வருகின்றன.

நுவரெலியா மாவட்டத்தில் தோட்டம், நகரம், கிராமம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் பல்வேறு அசௌரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

குளிர் பிரதேசம் என்பதால், இங்கு வாழும் மக்களுக்குச் சுடுநீர் தேவைப்பாடு அதிகமாகவே உள்ளது. விறகுத் தட்டுப்பாடு காரணமாக சிலர் சுடுதண்ணீரைப் பருகாமையால், தடிமன், காய்ச்சல் உள்ளிட்ட நோய்களால் அவதிப்படுகின்றனர்.

நுவரெலியா நகரில் உள்ள ஒரு சில சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களில், எரிவாயு சிலிண்டர்களை பதுக்கி வைத்து கொண்டு, 300 முதல் 400 ரூபா வரை அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு உள்ளன.

நுவரெலியா நகரில் கடைகளில் மண்ணெண்ணெய் அடுப்புக்கும் பெரும் கிராக்கி ஏற்பட்டு, அடுப்பின் விலை 8 ஆயிரத்து 500 ரூபா வரை அதிகரித்துள்ளது. இங்கு வாழும் மக்கள், விறகு அடுப்புகள் உபயோகிக்கிற போதிலும் விறகு தேடுவதற்குக் காடுகளுக்குச் செல்ல முடியாது வனப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் சுடு தண்ணீரின் தேவைக்கு மதிப்பளித்துச்சமையல் எரிவாயு,விறகு, மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடுகள் ஏற்படாது, மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மாதகல் கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்தில் மீனவர் உயிரிழப்பு!

மாதகல் கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற மீனவர் சடலமாக கரை ஒதுங்கியுள்ளார். அவர் சென்ற படகு சேதமடைந்து கடலில் கவிழ்ந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மாதகல் குசுமாந்துறையைச் சேர்ந்த திலீபன் என அழைக்கப்படும் எட்வெர்ட் மரியசீலன் (வயது – 31) என்ற மீனவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த மீனவர் தொழிலுக்குச் சென்ற நிலையில் மாதகல் கடற்பரப்பில் 200 மீற்றர் தூரத்தில் படகு கவிழ்ந்து காணப்பட்டுள்ளது. அதனை அடுத்து உள்ளூர் மீனவர்களால் படகு மீட்கப்பட்டதுடன் உயிரிழந்த மீனவரின் சடலமும் மீட்கப்பட்டது.

மீனவரின் படகு மீது கடற்படையினரின் படகு மோதியே விபத்து ஏற்பட்டுள்ளது என உள்ளூர் மீனவர்கள் குற்றச்சாட்டும் நிலையில் கடற்படை அதனை மறுக்கின்றது.

இந்திய மீனவர்களின் றோலர் படகு மோதி இருக்கலாம் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# மட்டு. போதனாவுக்கு ஆஸி அரசு தொடர்ந்து உதவிகளை வழங்கும்

## அந்நாட்டு தூதர் டேவிட் கொலின் உறுதி




மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சிறுவர் மற்றும் கர்ப்பிணிப்பெண்கள் பிரிவின் அபிவிருத்திக்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் தொடர்ச்சியான உதவிகளை வழங்கும் என இலங்கைக்கான அவுஸ்திரேலியா நாட்டின் தூதுவர் டேவிட் கொலின் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஆஸ்திரேலியா நாட்டின் தூதுவர் டேவிட் கொலின் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது இலங்கைக்கான ஆஸ்திரேலியா தூதரகத்தின் முதல் செயலாளர் எரிக்கா செய் மோர், சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் சிவசுதன் மற்றும் யுனிசெப், ஆஸ்திரேலிய எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் கே.கலாரஞ்சனியுடன் வைத்தியசாலையின் நிலைமைகள் மற்றும் அங்கு முன்னெடுக்கப்படவேண்டிய பணிகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் போதனா வைத்தியசாலையின் சிறுவர் மற்றும் கர்ப்பிணிப்பெண்கள் பிரிவின் பொறுப்பதிகாரி சிறுவர் வைத்திய நிபுணர் வைத்தியர் திருமதி சித்திரா கடம்பநாதனால் சிறுவர் மற்றும் கர்ப்பிணிப்பெண்கள் பிரிவின் அவசர சிகிச்சை பிரிவு அமைப்பது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது சிறுவர் மற்றும் கர்ப்பிணிப்பெண்கள் பிரிவிற்கு அமைக்கப்படவுள்ள அவசர சிகிச்சைப்பிரிவுக்கு தேவையான ஒரு கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

# வட்டுக்கோட்டையில் வைத்தியருக்கு சுகயீனம் நான்கரை மணி நேரம் அந்தரித்த நோயாளிகள்

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு கடந்த திங்கட்கிழமை வைத்தியர் வருகை தராததால் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வருகைதந்த நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சையைப் பெற முடியாது அந்தரித்துள்ளனர்.

இதுதொடர்பாக அந்த வைத்தியசாலையின் வைத்தியருக்கு தொலைபேசி அழைப்பு மேற்கொண்டவேளை, வைத்தியரின் மகளால் அந்த தொலைபேசி அழைப்பிற்குப் பதிலளிக்கப்பட்டது.

வைத்தியரின் மகள் தொலைபேசி மூலம் தெரிவிக்கையில், ‘அம்மாவிற்கு உடல் சுகயீனம், அதனால் இன்று வைத்தியசாலைக்கு சமுகமளிக்க மாட்டார். இது தொடர்பான சுகவீன விடுமுறை கடிதம் இன்று காலை உரியவர்களிடம் வழங்கப்பட்டது’.- என்றார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிக்கையில் –

குறித்த வைத்தியசாலையின் வைத்தியர் சுகவீன விடுமுறையை முறைப்படி பெற்றுள்ளார்.

மேலும் தற்போது அந்த வைத்தியசாலைக்கு ஒரு வைத்தியர் மட்டுமே சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார். எனவே ,இன்று குறித்த வைத்தியசாலையின் வைத்தியர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்கு வரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வேறு ஒரு வைத்தியரை இன்றைய தினம் பதில் கடமைக்கு அமர்த்தியுள்ளோம். அவர் வேறு ஒரு வைத்தியசாலையில் கடமை புரிகின்றார்.

எனவே அந்த வைத்தியசாலையின் கடமைகளை முடித்துவிட்டு வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு வருவார். இந்த வைத்தியர் பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் கலந்துரையாடி, எதிர்காலத்தில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிப்போம். – என்றார்.

அந்தவேளை அரைவாசிக்கும் அதிகமான நோயாளிகள் வைத்தியர் வரவில்லை என்ற காரணத்தால், வைத்திய சேவையைப் பெறாமலேயே வீட்டுக்குச் சென்று விட்டனர். பின்னர் 11.30 மணியளவில் வேறொரு வைத் தியர் அங்கு கடமைக்கு வந்திருந்தார்.

இது தொடர்பாக அங்கிருந்த நோயாளிகள் தெரிவித்தவை –

இந்த வைத்தியசாலை ஒரு பிரதேச வைத்தியசாலை தரத்திற்குள் உள்ளடங்கப்படும் வைத்தியசாலை. ஆனால் ஒரு வைத்தியர் மட்டுமே இங்கு கடமை புரிகின்றார். அத்துடன் 24 மணிநேர சேவைகளும் இங்கு வழங்கப்படுவதில்லை. சுமார் பத்துக்கும் மேற்பட்ட பகுதிகளைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த வைத்தியசாலையில் சேவையைப் பெறுவதற்கு உள்ளன.

ஆனால் ஒரு வைத்தியருடன், குறிப்பிட்ட அளவு நேரம் வரை மட்டுமே வைத்திய சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதால் அனைத்து நோயாளிகளாலும் சிகிச்சைகளையோ அல்லது வைத்திய ஆலோசனைகளையோ பெற முடியாத நிலை இங்கு காணப்படுகின்றது.

இதனால் இங்கு சிகிச்சைகளைப் பெற முடியாத மக்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் அருகிலுள்ள தனியார் வைத்தியசாலைகளையோ அல்லது யாழ். போதனா வைத்தியசாலையையோ நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே இந்த வைத்தியசாலைக்குத் தேவையான வைத்தியர்களைக் கடமைக்கு அமர்த்தி 24 மணி நேரச் சேவையை நடைமுறைப்படுத்தினால் மக்கள் தமக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகளையோ அல்லது சிகிச்சைகளையோ இலகுவாகப் பெற்றுக் கொள்வார்கள். – என்றனர்.

அத்துடன் இந்த வைத்தியசாலையில் கடமை புரியும் ஒருசில தாதியர்கள் நோயாளிகளுடன் சிறந்த தொடர்பாடலைப் பேணுவதில்லை என்ற குற்றச்சாட்டையும் மக்கள் முன்வைத்தனர்.

## கர்தினாலின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்து பொலிஸார் விளக்கம்



கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குற்றச்சாட்டுக்களை பொலிஸார் நிராகரித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமையன்று வெளிநாட்டு வாழ் இலங்கையர்களுடன் மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்து கொண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் தொடர்பாகக் கர்தினால் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

தாக்குதல் குறித்த விசாரணைகளின் அடிப்படையில் உயர் நீதிமன்றில் 12 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன எனவும், 42 சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கர்தினால் வெளியிட்ட ஏழு விடயங்கள் தொடர்பில் பொலிஸார் விளக்கம் அளித்துள்ளனர்.

சாட்சியங்களின் அடிப்படையிலன்றி வெறும் கருத்துக்கள் அறிக்கைகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை சுமத்தி நடவடிக்கை எடுக்கப்பட முடியாது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# லசந்த கொலைக்கு காலங்கடந்தாலும் நீதி நிலைநாட்டப்படுதல் அவசியமாகும்

## தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்து

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்குக் காலம் கடந்தாலும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் இது விடயமாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 13 ஆண்டுகளைக் கடந்துள்ள போதும் இன்றுவரை நீதி நிலைநாட்டப்படவில்லை.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் இனி மேலும் இலங்கையில் நீதி நிலை நாட்டப்படுவதென்பது சந்தேகமே. நாட்டில் மாறி மாறி வரும் ஆட்சியாளர்களால் கொலைக் குற்றவாளிகள் தொடர்ச்சியாகவே ஏதோ ஒரு காரணத்தின் அடிப்படையில் காப்பாற்றப்படுகின்றார்கள் என்பது உறுதியாகத் தெரிகின்றது.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க போன்று கடந்த காலங்களில் நாட்டில் பல நேர்மையான ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அதிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் அதிகமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இவர்களுடைய படுகொலைகளுக்கும் இன்று வரை நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதனூடாக இலங்கையில் ஜனநாயகம் துளியளவு கூட இல்லை என்பது தெரிகின்றது. நாட்டில் படுகொலைகள் நிகழ்ந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் மக்கள் முன் வெறும் கண்துடைப்புக்காகக் கொலை தொடர்பில் விசாரிப்பதற்கு விசாரணைக் குழு அமைத்திருக்கின்றோம்.

அந்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று ஊடகங்கள் மூலம் தெரிவித்துவிட்டுச் சென்றுவிடுவார்கள். இதுவரை காலமும் நடந்த படுகொலைகளுக்கான விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் எந்தக் கொலைக் குற்றவாளிகளும் தண்டிக்கப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

ஜனநாயக சோசலிச குடியரசு என்று கூறப்படுகின்ற எமது நாட்டில் ஜனநாயகம் என்ற ஒரு சொல் தேவைதானா என்று நாம் இந்த ஆட்சியாளர்களிடம் கேள்வி எழுப்புகின்றோம்?

இந்த நாட்டின் நீதித்துறை என்பது சிறு குற்றங்களைப் புரிந்த அப்பாவிப் பொதுமக்களிடம் இருந்து தண்டப் பணத்தை அறவிடும் விதத்திலேயே தொடர்ந்தும் செயற்படுகின்றதே தவிர கொலையாளிகளையும், கொள்ளைக் காரர்களையும் சுதந்திரமாக அரச பாதுகாப்புடன் திரிவதற்கு மறைமுக ஆதரவைக் கொடுத்திருக்கின்றது என்பது நிதர்சனமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவிற்கும் படுகொலை செய்யப்பட்ட ஏனைய ஊடகவியலாளர்களுக்கும் நாடு கடந்து சர்வதேச அரங்கிலாவது நிச்சயமாக நீதி கிடைக்கவேண்டும் அந்த நீதி கிடைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்துமத அகற்சியில் விவேகானந்தர்

**சுவாமி விவேகானந்தரின் 159ஆவது பிறந்த தினம் இன்று (ஜனவரி12). அதனையொட்டி இக்கட்டுரை வெளிவருகிறது.**



கௌ.சித்தாந்தன்

சமயம் பற்றிக் கூறும் நூல்களின் விளக்கத்தின் அடிப்படையிலும் சமயத்தைப் பின்பற்றும் மக்களின் தொகை அடிப்படையிலும் முதன்மை நிலையில் நிற்கும் மதங்களில் இந்துமதமும் ஒன்று. முன்னணியில் நிற்கும் ஏனைய மதங்களில் இல்லாத இந்துமதச் சிறப்பு என்னவென்றால் குறிப்பிட்ட தொரு காலத்திலே குறிப்பிட்ட ஒருவரால் அது தோற்றுவிக்கப்படாதது என்பதுதான். அதாவது குறிப்பிட்டதொரு காலத்துக்கு ஏற்ற மதக்கருத்தியல் என்றில்லாது, காலத்துக்கு உகந்த நல்ல மாறுதல்களையும், உள்வாங்கி ஏனைய சமயங்கள் கூறும் பயனுள்ள கருத்துக்களையும் பெற்று, தன்னை அது வளர்த்து வந்து கொண்டிருக்கிறது. 'நவீன இந்து மதம்' என்ற கருத்தியல் இவ்வாறு வந்ததுதான். இந்து சமயத்தின் விசாலிப்பிலே 'நவீன இந்துசமய சீர்திருத்த இயக்கம்' என்பதற்கும் முக்கியமான இடமுண்டு. மக்கள் மயப்பட்டு நிற்பதுதான் இயங்கியல் தன்மை கொண்டது. இந்து சமய இயக்கத்துக்குத் தமது வாழ்வை அர்ப்பணித்துப் பணியாற்றியோரில் விவேகானந்தர் 1863 - 1902 முக்கியமானவராகக் காணப்படுகிறார்.

இந்து சமயத்தைப் பெயரற்ற மதம் என்றுதான் கூறுகிறார்கள். 'சநாதன தர்மம்' என்பதுதான் இதன் உண்மையான பெயர் 'சநாதனம்' என்பதற்கு அழிவற்றது என்றுதான் அகராதி பொருள் கூறும். இதன்படி என்றும் உள்ளதான இயற்கையை சநாதன தர்மத்தை இது சுட்டி நிற்கின்றது.

'இந்து சமயத்துக்குப் புதிய விளக்கம் தேவை என்கிறார்' டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை (1936 - 2015). நாவலர் இந்து சமயம் என்ற சொல்லையே கையாளவில்லை என்று பேராசிரியர் வை. கனகரத்தினம் (1946 -2016) எழுதியிருக்கிறார். சைவசமயம் என்பதுதான் இலங்கையின் நீண்டகால வழக்கு. சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தை அகலப்படுத்திப் பார்த்தால் அதனுள் சங்கரர் குறிப்பிடும் ஆறுவகையான சமயங்களும் இருப்பது தெரியவரும்.

சுவாமி விவேகானந்தரின் தந்தை விஸ்வநாத தத்தா, தாய் புவனேஸ்வரி. விவேகானந்தரின் இயற்பெயர் வீரேஸ்வர். இம் மூன்று பெயர்களும் சைவ சமய பெரியாளாயிருந்தும் விபூதியணிந்த விவேகானந்தரை யாம் பார்த்ததில்லை. ஆயினும் இக்காலத்தில் நெற்றியிலே நீறில்லாது கற்பிக்கும் சமயாசிரியர் போன்றவரல்லர் விவேகானந்தர்.

சமயம் என்பது 'சம' என்பதன் அடியாகப் பிறந்தது. இதன் பொருளறிய சமதை, சமநிலை, சமநோக்கு முதலான சொற்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சமுதாயம் சமயத்திற்கு முந்தியது. எனவே தான் விவேகானந்தர் 'சமயம் வாழ வேண்டுமானால் முதலில் சமூகம் வாழ வேண்டும்' என்றும் 'ஒரு ரொட்டித் துண்டுக்குக் கூட வகை செய்யாத சமயம் தேவையற்றது' என்றும் கூறினார். பசியுடனிருக்கின்ற ஒருவனிடம் போய் சமயத் திருநூல்களைப் படி என்று கூறுவது அவனைக் கேலி பண்ணுவதற்கு ஒப்பானது என்றார்.

சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படாது செயற்பட்ட சமய ஞானிகளை விவேகானந்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. விவேகானந்தர் சமூகப்பணி புரிய இவரின் குருவான சுவாமி இராமகிருஷ்ண பரஹம்சர் (1836 - 1886) அவர்களே காரணராவார். 'தன்னலமற்ற சேவையினாலே'தான்' என்ற கேடு நீங்கும் என்றும் 'தவிக்கின்ற ஒரு மனிதனிற்கு உதவ நான் இருபதினாயிரம் பிறவிகள் எடுக்க நேரிட்டாலும் அதற்கும் சித்தமாயிருக்கிறேன்' என்றும் இராமகிருஷ்ணர் கூறியமை விவேகானந்தருக்கும், சமூகத்தை விட்டு விலகிச் செல்லும் இந்துமத ஞானிகளுக்கும் முன்மாதிரியானது. விவேகானந்தனின் படி நாட்டுப்பற்று என்பது தெய்விகமானது. அது 'நாட்டு மக்களிடம் அன்பாக இருந்து அவர்கட்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பது' எனும் பொருள்களைக் கொண்டது.

ஏழைகளுக்கு உண்மையாகக் தொண்டாற்ற காசி முதல் கன்னியாகுமரி வரையுள்ள முக்கியமான இடங்களுக்கு யாத்திரை செய்தார். கன்னியாகுமரி சென்ற விவேகானந்தர் சமுத்திரத்திலே குதித்து நீந்திச் சென்று ஒரு பாறையின் மீது நிஷ்டையிலிருந்து எழுந்து தான் கோடிக்கணக்கான ஏழை இந்தியர்களுக்குச் சமூகப்பணிபுரிய விழைந்தார். இதன் போது தான் தேசம் குடிசையில் வாழ்கின்றது என்பதனையும் இவர்களுக்குச் செய்யும் சீவபூசைதான் சிவபூசை என்றும் உணர்ந்து கொண்டார்.

சுவாமி விவேகானந்தர் நரேந்திரநாத், விஷனஞ்தா முதலான பெயர்களில் வாழ்ந்தமை கூட அவ்வப்பிரதேச மக்களைக் கவர்ந்து சமூகப்பணி புரிவதற்காகவே என்பர்.

விவேகானந்தர் 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் இடம் பெற்ற சர்வ சமயப் பேரவையின் கூட்டத்திலே பங்குவதற்கு இரண்டு முக்கிய காரணங்களிருந்தன. ஒன்று - இந்து சமயத்தின் விரிந்து, பரந்துபட்ட பெருமையை உலகறியச் செய்வது. மற்றையது - அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் செல்வ வளத்தைப் பெற்று வறிய மக்களுக்கு உதவுவது. செப்டம்பர் 11ஆந் திகதி ஆரம்பித்த மாநாட்டிலே 'அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே, சகோதரர்களே! என்று விவேகானந்தர் விளித்து உரையாற்றத் தொடங்கியமை, 'உலக மக்கள் அனைவரும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்' என்ற உணர்வை ஊட்டும் அவரது கூர்த்த மதியையும் இந்து மதத்தின் பரந்த இயல்பையும் தெற்றனெக் காட்டியது. இந்து மதத்தின் மிகப்பரந்த தன்மையினை உலக நாடுகளிலுள்ளவர்க்குப் பரப்பும் வகையில் 1893ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சிக்காக்கோ நகரிலே சர்வசமய பொது மன்றத்தினையும், இராம கிருஷ்ண மினின் கிளையினையும் உருவாக்கினார்.

இலங்கையிலும் 1897 ஜனவரி நடுப்பகுதியில் கொழும்பு, அனுராதபுரம்,யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலே சுவாமி விவேகானந்தர் சொற்பொழிவாற்றி இங்கும் இந்துசமயம் செழிக்க தொண்டாற்றியமையினை எம்மாலும் இலகுவில் மறந்துவிட முடியாது.

சமுதாயப்பணிக்கு மேல் சமயப் பணியும் போதுமான அளவுக்கு ஆற்றினார். அறிவியலைச் சமயத்துடன் இணைத்து இந்து சமயத்தை விஸ்தாரப் படுத்தியதில் விவேகானந்தருக்கு முக்கிய பங்குண்டு. அறிவியல் சார்ந்து பணியாற்றுவதற்கு இவர் ஆரம்பத்திலே பகுத்தறிவாளியாக இருந்தமையும் ஒரு காரணம். 'நாஸ்திகனை நம்பாதீர்கள்; அவனை நான் காசியில் கண்டனன்' என்று கண்ணதாசன் குறிப்பிடப்பட்டவனைப் போன்றவரல்லர் விவேகானந்தர்.

ஏழ்மையான மக்கள் தமது வறுமையைப் போக்கிக் கொள்வதோடு அறிவின் வறுமையைப் போக்கி மேனிலை பெற இந்து சமய உண்மையை விளக்கும் அரிய பல நூல்களைத் தேடிக்கற்க வேண்டுமென்றார் விவேகானந்தர். ஆரம்பத்திலே அறிவை ஆயுதமாகக் கொண்ட பிரம்ம சமாஜத்திலே தீவிரமான ஓர் உறுப்பினராக விவேகானந்தர் இருந்து பணியாற்றியமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

விவேகானந்தர் ஏராளமான நூல்களைக் குறுகிய காலத்திலேயே கற்றுத்தேறிய பட்டதாரி. இவரது கற்றலுக்கு தியானமும் மன ஒருமைப்பாடும் காரணமாகும். கற்றலுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது தான் மன ஒருமைப்பாட்டுடன் கற்றல் என்றார். இக்கருத்து எங்களுக்கு முன்மாதிரியானது.

விவேகானந்தர் இந்து மதக் கிரியைகளில் நாட்டம் செலுத்தியவராகத் தெரியவில்லை. இறைவனுடனான நேரடி வழிபாடு அவர் காட்டிய வழிபாடு. மனோபலம், பக்தி, ஞானம்தான் அவர் உயிர்களின் மீட்சிக்குக் காட்டிய சாதனங்கள். உற்பத்திக் கோட்பாட்டிலே 'பீற்றர்ட்றக்' அவர்களின் 'வினைத்திறன்', 'விளைதிறன்' கோட்பாடுகள் பெரிதாகப் பேசப்படுகின்றன. இதனை சுவாமி விவேகானந்தர் அவர்களின் இந்து சமய மற்றும் சமூகப் பணிகளிலும் இவற்றைப் பொருத்திப் பார்ப்பதும் பொருத்தம் போலத் தெரிகிறது. இந்து மதம் கூறும் அகவழிபாடு, புற வழிபாடு எனும் இரண்டில் விவேகானந்தர் வலியுறுத்தியது பெரிதும் அகவழிபாட்டினையே.

ஆன்மா விடுதலையில் நாட்டம் கொண்டவர்களுக்கு இந்து மதத்தின் படியான 'நிர்விகல்ப சமாதி' முக்கியமானது. எண்ணம், சொல், செயல் மூன்றும் அடங்கும் நிலை இது. இராமகிருஷ்ணர் நாற்பதாண்டு காலத்தில் பெற்றதை விவேகானந்தர் மூன்று நாள்களில் அடைந்து விட்டாரென்பர். இது உலக மதத்தவர் யாவருக்கும் ஒரு முன்மாதிரி. ஏனெனில் வாழ்க்கையின் நோக்கமே (Aim of the Life) இறைவனை அடைதல் அல்லது ஆன்ம விடுதலை. இதற்குமேல் எதுவுமில்லை.

# தமிழ்த் தலைவர்களை விலைக்கு வாங்கி தமது கூலிகளாக வைத்திருக்கிறது இந்தியா

## கஜேந்திரன் எம்.பி. சாடல்



இந்தியா தமிழ்த் தலைவர்களை விலைக்கு வாங்கி அவர்களைத் தங்களுடைய கூலிகளாக வைத்துக் கொண்டு தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற பெயரிலேயே இந்த ஒற்றையாட்சிக்குள் தமிழர்களிடத்தில் திணிப்பதற்குத் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழராய்ச்சி மாநாட்டிலே படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூறும் நிகழ்வு தமிழாராய்ச்சி மாநாடு நினைவுத் தூபியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பொதுமக்களை பொலிஸார் தாக்கினர். சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியவர்களே தவறு இழைத்தனர். அப்பாவி மக்கள் 11 பேர் படுகொலை செய்வதற்கு காரணமாக அமைந்தனர். குறித்த சம்பவம் இடம்பெற்று 47 வருடங்கள் கடந்த நிலையிலும் அது தொடர்பாகக் குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை.

அப்போதிருந்த மாநகர மேஜர் அல்பிரெட் துரையப்பா செய்த அந்த பெரும் துரோகம் ஆட்சிக் காலத்திலேயே தமிழர்கள் மிகப் பெரும் போராட்டத்தில் ஈடுபட கூடிய ஒரு நிலைமை தான் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. தமிழர்களைப் பொறுத்த வரையிலே தமிழர்கள் மீதான இந்த படுகொலைகளை மட்டுமல்ல வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் ஸ்ரீலங்கா பொலிஸார், படையினர் மேற்கொண்ட படுகொலைகள் பாரியளவிலான போராட்டத்தில் ஈடுபட அதற்கான சூழலை உருவாக்கியது.

அந்த ஆயுத போராட்டம் பின்னர் சர்வதேச துணையோடு இருந்தாலும் அது மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கவில்லை. ஒரு துரோகத்தனமான செயற்பாட்டிலேயே தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டிருக்கின்றமை என்பதுதான் மிகவும் துரதிஷ்டவசமானதாக இருக்கிறது.

இந்த செயற்பாடு மீண்டும் தமிழர்களை எங்கே கொண்டு செல்லப் போகின்றது என்பது தொடர்பாக ஓர் அச்சம் ஏற்படுகின்றது. தமிழர்களை நிராகரித்து தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஷ்டி தீர்வு வேண்டும் என்று வலியுறுத்தி எழுபத்தி நான்கு வருடங்களாகத் தமிழர்கள் போராடி வந்திருக்கின்றனர்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் வாக்கு பெற்ற கட்சிகள் ஒற்றையாட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் எமது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தோம். அன்று எங்களுடைய கருத்தை பொய் என்று சொன்னார்கள். 2015 ஆம் ஆண்டில் நாங்கள் சொன்ன கருத்துக்கள் ஓரளவுக்கு உண்மையாகத் தொடங்கியது.

நீதியரசராக இருந்த கைக்கூலியான விக்னேஸ்வரனைத் தமிழர்களில் ஒருவராகக் காட்டி, தமிழ் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கூட அவரை ஒரு நல்லவர் வல்லவர் என்று எங்களுடைய மக்களுக்கு காட்டி அவரை தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்க துணை நின்று இருந்தார்கள்.

புலம்பெயர் தேசங்களில் இருந்தும் அவருடைய துரோகத்தனம் தெரிந்து கொண்டும் அவருக்குத் துணை நின்றனர். விக்னேஸ்வரன் கூட இந்த 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற இந்தத் துரோகத்துக்கு துணை போயிருக்கின்றார். மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன், சித்தார்த்தன், மாவை சேனாதிராசா, விக்னேஸ்வரன் ஆகியவர்கள் கூட்டிணைந்து அரசமைப்பு ஆவணம் ஒன்றைத் தயார் செய்திருக்கிறார்கள். இது படிப்படியாக வளர்ச்சி அடைந்து நாடாளுமன்றத்திலும் அந்த அரசமைப்பை ஆதரிப்பார்களாக இருந்தால் இந்த தீவில் தமிழர்கள் நிரந்தர அடிமைகளாக்கப்படுவார்கள்.

இந்தியா தமிழ் தலைவர்களை விலைக்கு வாங்கி அவர்களைத் தங்களுடைய கூலிகளாக வைத்துக் கொண்டு தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற பெயரிலேயே இந்த ஒற்றை ஆட்சிக்குள் தமிழர்களிடத்தில் இந்த செயற்பாட்டுக்குத் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மக்கள் விழிப்படைய வேண்டும் என்று இந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட இந்த மக்கள் மீது நாங்கள் ஆணையாக கேட்கின்றோம். – என்றார்.

# சுசில் வகித்து வந்த இராஜாங்க அமைச்சை தினேஷிடம் வழங்கினார் ஜனாதிபதி கோட்டா!

பதவி நீக்கம் செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கீழ் இருந்த விடயங்கள் மற்றும் நிறுவனங்கள் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி நிறுவனம் என்பனவே கல்வி அமைச்சரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

10 அமைச்சுக்களின் விடயதானங்களை திருத்தியமைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திங்கட்கிழமை வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலேயே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.

இதேவேளை சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சின் நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகள் நீதி அமைச்சிடம் ஒதுக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த இருந்தார்.

இருப்பினும் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினார் என வெளியான குற்றச்சாட்டை அடுத்து அவர் அப்பதவியை இராஜினாமா செய்திருந்தார்.



மேலும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சின் கீழ் இருந்த மத்திய கலாசார நிதியம், புத்த சாசன அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடர்ந்து இராஜாங்க அமைச்சின் கீழ் இருந்த உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 அத்தியாயம்) மற்றும் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம், 1988 இலக்கம் 2 ஆகியவை பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

# தேசிய ரீதியில் சம்பியன் மகுடம்வென்ற கிளிநொச்சி கபடி அணிக்கு வரவேற்பு!

கபடி தேசிய சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியான கபடிப் போட்டியில் வரலாற்றில் முதல் தடைவையாக கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியனானது

கிளிநொச்சி மாவட்ட அணி சார்பாக உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் பெண்கள் அணியினர் பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) மகத்தான வரவேற்பு உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தினரால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளர் சிவநேசன், சிவநகர் அ.த.க பாடசாலையின் முன்னாள் முதல்வர் ஐ.இராசரத்தினம், பிரதேச சபையின் உறுப்பினர் ஜீவராசா மற்றும் வீராங்கனைகளின் பெற்றோர்கள் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# முக்கிய வெளிநாட்டு பிரதிநிதிகள் நால்வர் இலங்கைக்கு விஜயம்!

நான்கு முக்கிய வெளிநாட்டு பிரதிநிதிகள் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஹங்கேரியின் வெளிவிவகார அமைச்சர் அமைச்சர் பீட்டர் சிஜார்டோ , துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் மெவ்லூட் கவுசோக்லு , இங்கிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் காமன் வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சர் லார்ட் அஹ்மத் மற்றும் கொரியாவின் தேசிய சட்டமன்றத்தின் சபாநாயகர் பார்க் பியோங் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஹங்கேரியின் வெளிவிவகார அமைச்சர் பீட்டர் சிஜார்டோ இன்று இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை லார்ட் அஹ்மட் ஜனவரி 18 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கொரிய தேசிய சபையின் சபாநாயகர் ஜனவரி 19 ஆம் திகதி இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. சீன அரச சபை உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ தற்போது இலங்கைக்கான விஜயத்தை முடித்திருந்தார்.

சர்வதேச சமூகத்துடன் இலங்கை தொடர்ந்தும் வலுவான இருதரப்பு உறவுகளைப் பேணி வருவதை இந்த விஜயங்கள் காட்டுகின்றன என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# மூன்று புதிய அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையகத்தில் பதிவு

2021 ஆம் ஆண்டுக்காக மூன்று புதிய அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதன்படி, தமிழ் மக்கள் கூட்டணி, புதிய லங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி என்பன பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணி கட்சி வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


காலைக்கதிர்
Kalaikkathir

## ஆரியகுளத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்திருந்தார்.

ஆரியகுளம் மறுசீரமைக்கப்படும் போது இருந்த பேச்சைவிட இந்த உரித்







துத் தொடர்பான விவகாரம் அதிக பேசு பொருளானதனால் அது தொடர்பான உரித்து ஆவணத் தேடலும் மும்முரமாக இடம்பெற்றது.

1930ஆம் ஆண்டு நில அளவைத் திணைக்களம் வரைந்த வரைபடத்தை வைத்துக் கொண்டு, 1938 ஆம் ஆண்டு அப்போதைய யாழ். மாவட்ட அரச அதிபர், அப்போதைய உள்ளூர் அபிவிருத்தி அதிகார சபைக்கு அதனைப் பராதீனப் படுத்த வரைபடம் தயாரிக்குமாறு எழுத்தில் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அப்போதை ஆளுநர் வழங்கிய அனுமதியின் பெயரில் ரி.13817 இலக்க நில அளவைத் திணைக்களத்தின் வரை படம் மூலம் மாநகர சபையும் (அப்போதைய நகர அபிவிருத்தி சபையிடம்) அது கையளிக்கப்பட்ட வரைபடமும் கிட்டியுள்ளது.

## குட்டித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளாட்சிசபைகளின் செயற்பாட்டுக்கு மக்கள் நான்காண்டுகளே ஆணை வழங்கினர். தற்போது மக்கள் ஆணையை மீறும் வகையில் பதவிக் காலம் ஓராண்டு நீடிக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக விரோத செயலாகும்.

இந்த நடவடிக்கையை அரசு மீளப் பெறவேண்டும். உரிய காலப்பகுதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் - என்றார்.

## இடியன் துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாட்டுச் சம்பவத்தின்போதே இடியன் துப்பாக்கி வெடித்துள்ளது.

இதன்போது 22 வயதுடைய பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த சபிசன் என்ற இளைஞர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய உறவு முறையான 47 மற்றும் 32 வயதுகளையுடைய சந்தேகநபர்கள் இருவரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## சு.க.தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்று இருந்தனர். அதன்பின்னர் கட்சி மீண்டெழுந்தது. தற்போது 14 உறுப்பினர்கள் இருக்கின்றோம். 1977ஐ விட சிறந்த நிலையில் உள்ளோம். எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் எதிர்காலத்தில் ஆட்சி மலரும்.

நல்லாட்சியின்போது பல திட்டங்களை முன்னெடுத்தோம். சேவைகளை செய்தோம். தற்போதுபோல் அமைச்சுகளின் செயலாளர்கள் பதவி விலகவில்லை. விமர்சிக்கின்றார்கள் என்பதற்காக அமைச்சுப் பதவிகள் அன்று பறிக்கப்படவில்லை - என்றார்.

## விவாதத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் மைத்திரிபால சிறிசேன கருத்துக்களை வெளியிட்டமையுடன், ரவி கருணாநாயக்கவையும் மறைமுகமாகச் சாடியிருந்தார்.

இந்நிலையில், இதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்தில் ரவியால் ஊடக சந்திப்பு நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மைத்திரியால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் அதிகார துஷ்பிரயோகம் உட்பட சில விடயங்கள் தொடர்பில் ஏழு ஆவணங்களை ரவி கருணாநாயக்க முன்வைத்தார்.

அவற்றில் தவறு இருக்கின்றதெனில் பகிரங்க விவாதத்துக்கு வருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

## எவரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்றால் வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை உடனே நிமிர்த்த முடியாது.

கடந்த அரசும் எமது அரசிடம் ஆட்சியைக் கையளிக்கும்போது நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச்சியில் இருந்ததை எவரும் மறந்திடலாகாது.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னகர்த்தும் நடவடிக்கையில் நிதி அமைச்சு ஈடுபட்டுள்ளது.

அரசுக்குள் இருந்துகொண்டு அரசை விமர்சிப்பவர்கள் உத்தமர்கள் அல்லர். அதேவேளை, அரசை விமர்சிக்கும் எதிரணியினரின் வாய்ச்சவடால்கள் குறித்து பொதுமக்கள் நன்கறிவார்கள் - என்றார்.

## ராஜபக்ஷ குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு வருகின்றார்.

இந்நிலையில், நேற்று கரவெட்டியில் ஐக்கிய மக்கள் கட்சியின் உடுப்பிட்டி தொகுதி அமைப்பாளர் அகிலதாஸின்



ஏற்பாட்டில் தைப்பொங்கலுக்குப் பொங்கல் பொருள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியானது எதிர்க்கட்சியாக இருந்து கொண்டும் அரசியலில் மட்டும் கவனம் செலுத்தாது மக்களின் சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களிலும் அவதானம் செலுத்தி வருகின்றது.

குறிப்பாக நாடு முழுவதிலும் உள்ள பின்தங்கிய வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்துள்ளதோடு பாடசாலைகளுக்குத் தேவையான நவீன கல்வி பயிலும் உபகரணங்களையும் வழங்கி வருகின்றோம்.

இவ்வாறான சேவையை வழங்குவதையிட்டு பெருமையடைகின்றேன். ஏனென்றால் எந்தவொரு எதிர்க்கட்சியும் இவ்வாறு செயற்பட்டது கிடையாது.

குறிப்பாக எதிர்க்கட்சியாக உள்ளவர்கள் அரசியலில் மட்டும் கவனம் செலுத்துவார்கள். நாங்கள் ஒரு புதிய கட்சி. ஆனால், நாங்கள் புதிய யுகத்துக்கான பயணத்தை நோக்கிப் பயணிக்கின்றோம்.

தற்போது மக்கள் அரசை வெறுக்கின்றார்கள். ஏன் இவர்களுக்கு வாக்களித்தோம் என்று எண்ணும் அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது.

ஆனால், நாங்கள் எல்லாவற்றையும் உற்றுநோக்கிச் செயற்படுகின்றோம். எனவே, அனைத்து மக்களும் எமது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் புதிய யுகத்தை நோக்கிப் பயணிக்க முடியும் - என்றார்.

## சட்டத்தரணிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், அதன் செயலாளராக இசுரு பலபட்டபெந்தி தெரிவு செய்யப்பட்டார்.

## நான்கு வாகனங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குச் சொந்தமான வாகனம், டிப்பர், ஓட்டோ, சைக்கிள் என வரிசையில் சமிஞ்சைக்காகக் காத்திருந்த வாகனங்களை மன்னார் பொது வைத்தியசாலை வீதியூடாக விளையாட்டு மைதானம் நோக்கிப் பயணித்த பஸ் மோதித் தள்ளியுள்ளது.

குறித்த பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் சமிஞ்சைக்காகக் காத்திருந்த ஏனைய வாகனங்களை மோதித் தள்ளியதில் ஓட்டோ முற்றுமுழுதாகச் சேதமடைந்தது.

இந்நிலையில், விபத்தை ஏற்படுத்திய தனியார் பஸ்ஸின் சாரதி அருகில் இருந்த வீதி ஒன்றில் பஸ்ஸை நிறுத்தி விட்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

இதைத் தொடர்ந்து மன்னார் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலைக்கதிர் Kalaikkathir

# கணவன் - மனைவியைப் போன்று கைக்குள் கை போடுகின்றனர் மஹிந்தவும் சீனாவின் அமைச்சரும்!

## அடிமையானமையே காரணமென இரா.சாணக்கியன் சாடல்



சீன வெளி விவகார அமைச்சரும் மஹிந்த ராஜபக்ஷவும் கைக்குள் கைபோட்டு கணவன் மனைவிபோல புகைப்படத்தை வெளியிட்டுள்ளனர். இவர்கள் இவ்வாறு இருப்பதற்கான காரணம் இவர்கள் அந்த நாட்டின் அடிமைகளாக மாறிவிட்டார்கள் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நொச்சிமுனை ஆலையடி சித்திவிநாயகர், கண்ணகியம்மன் ஆலயத்திற்கான மின்குமிழ் ஒரு தொகுதி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் வழங்கி வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியுதவியின் மூலம் குறித்த மின்குமிழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஆலயத்தின் தலைவர் எஸ்.ருத்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலய குருக்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஆலய பரிபாலன சபையால் கௌரவிக்கப்பட்டார். இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கை அரசாங்கம் தனது மோசமான தீர்மானத்தின் ஊடாக அண்மையில் சீன நிறுவனம் ஒன்றுக்கு 60 கோடியே 90 லட்சம் அமெரிக்க டொலர்களைச் செலுத்தியுள்ளது. விவசாய அமைச்சின் தவறான தீர்மானத்தின் கார ணமாகச் சீனாவில் கழிவுப்பொருள்களாக ஒதுக்கப்பட்ட வற்றை - இலங்கையில் விவசாயிகள் பயன்படுத்த முடியாத உரங்களை - இறக்குமதி செய்த போது அதனை இந்த நாட்டில் பயன்படுத்த முடியாது என நீதிமன்றம் கட்டளையிட்டதன் பிறகு சீனா இலங்கையில் உள்ள ஒரு வங்கியைத் தடைசெய்தது.

அதனைத் தொடர்ந்து 60 கோடியே 90 லட்சம் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டது. இலங்கையின் பணத்தில் 130 கோடி ரூபாவுக்கு மேலாகத் தண்டப்பணமாகக் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பணம் இந்த நாட்டின் மக்களது பணம்.

மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப தோட்டத்தில் தேங்காய் பறித்து விற்றோ, பஸில் ராஜபக்ஷ விவசாயம் செய்து உழைத்த பணமோ இல்லை. இந்த நாட்டின் மக்கள் செலுத்திய வரிப்பணமே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

மக்களது வரிப்பணத்தினையெடுத்து வேறு ஒரு நாட்டில் தேவையற்ற செலவைச் செய்துவிட்டு இந்த நாட்டு மக்களை மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளனர்.

சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவருடன் மஹிந்த ராஜபக்ஷவும் கைக்குள் கைபோட்டு கணவன் மனைவி போல புகைப்படத்தை வெளியிட்டுள்ளனர். இவர்கள் இவ்வாறு இருப்பதற்கான காரணம் இவர்கள் அந்த நாட்டின் அடிமைகளாக மாறி விட்டார்கள்.

இலங்கை மக்களின் நலன்கள் தொடர்பாகச் சிந்திக்கும் நிலையில்லை. இலங்கை மக்கள் பஞ்சத்தில் வாழும் போது தங்களின் எஜமானர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அந்த நாட்டுக்கு இவ்வாறு பெருந்தொகைப் பணத்தை கொடுத்துள்ளனர்.

இதனை இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் நபர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்கள் உணரவேண்டும். இவர்கள் இன்று மக்கள் படும் கஷ்டங்களைப்பற்றிப் பேசாமல், மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசாமல் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சில முக்கியமான பாடசாலைகளின் நிர்வாகத்துக்குள் தலையிடுகின்றார்கள்.

கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும். இன்று ஆசிரியர்களை இடமாற்றுவதன் மூலம் மட்டும் இந்த பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்றால் அவர்கள் முட்டாள்களாகத்தான் இருக்கவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை என்பது பெயர்பெற்ற மிக முக்கியமான பாடசாலையாகும்.

தங்களது அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்காக, தங்கள் அரசியல் இலாபங்களுக்காக சிவானந்தா தேசிய பாடசாலை போன்ற பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இவ்வாறான அரசியல் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தி பாடசாலைக்குள் கல்வி நடவடிக்கைகள் சீராக நடக்கவேண்டும். எப்போது மாணவர்களின் கல்வியில் கைவைத்து தங்கள் அரசியலை முன்னெடுத்தார்களோ அன்றே அவர்களின் அழிவுகாலம் ஆரம்பமாகிவிட்டது.

இனிவரும் காலத்திலாவது மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் அவர்கள் செயற்படவேண்டும். 13ஆம் அரசியல் சீர்திருத்தத்தை அமுல்படுத்தக்கோரி தமிழ் கட்சிகள் திட்டத்தை ஆரம்பித்து இருந்தார்கள்.

இந்த வேலைத்திட்டம் தமிழரசுக்கட்சி ஆரம்பத்திலே தலைவருக்குக் கூட அழைப்பில்லாமல் அந்நிகழ்வுகள் இடம்பெற்றது. அதிலே இரண்டாவது, மூன்றாவது கூட்டத்தின் பின் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கலந்து கொண்டிருந்தார்.

அதிலேயே நான் நினைக்கின்றேன் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இறுதியாக ஒரு கூட்டத்திலே மலையகத் தலைவர்கள், இஸ்லாமியத் தலைவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய தமிழ் கட்சியின் அங்கத்தவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு வரைவு ஒன்றைத் தயார்ப்படுத்தி அதை டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி அனைவரும் தயார்ப்படுத்தியதாக அறியக்கூடியதாக இருந்தது.

அதனை அடுத்து அதில் சில மாற்றங்களைப் பற்றி எதிர்வரும் காலங்களில் பேச வேண்டும் என்று கூறி சில முன்மொழிவுகள் வந்திருந்தது. பலவிடயங்கள் பூர்த்தி அடையாமல் இருக்கின்றது என நினைக்கின்றேன்.

நான் பங்காளி கட்சிகளின் தலைவரும் அல்ல கட்சியின் தலைவரும் அல்ல, இதை நேரடியாகக் கட்சியிலே தலைமைத்துவப் பதவியில் இருக்கும் நபர்களிடம் கேட்க வேண்டும்.

ஆனால் நிச்சயமாக அவ்வேலைத் திட்டம் கைவிடப்படவும் இல்லை, அது முடிவுக்கு வரவும் இல்லை. அவ்வேலைத் திட்டம் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எம்மை, பொறுத்தவரையில் நாம் கிழக்கை மட்டும் மையமாக வைத்து அரசியல் செய்யும் கட்சியல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசுக் கட்சி என்பது வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் நிலைப்பாட்டைப் பற்றியும் நாம் சிந்தித்துச் செயல்படும் ஒரு கட்சி.

வடக்கு ,கிழக்கு என்ற இரு மாகாணங்களிலும் எதிர்காலத்தில் சிந்திக்கும் ஒரு கட்சி என்ற அடிப்படையில் என்ற கருத்து என்னுடைய கட்சியினுடைய கருத்தாகத் தான் கட்சியினுடைய நிலைப்பாட்டிலிருந்து தான் நாம் அதைப் பார்க்க வேண்டும்.

உண்மையிலேயே அந்த வரைவு ஒரு முடிவுக்கு வரவில்லை. பல பக்கத்தால் நான் 3 அல்லது 4 வரைவுகள் பற்றி அறிந்தேன். நாம் அதை இறுதியாக இந்தியத் தூதரகம் அல்லது இந்தியன் நாட்டுக்குக் கையளிக்கும் அந்த வரைவைப் பார்த்த பின் அதை ஆராய்ந்து அந்த வரைவைப் பற்றி சில கருத்துக்களை கூறினேன்.

அதற்கு ஒரு சில கட்சிகள் 13 ஆம் திருத்தத்தை மாத்திரம் அமுல்படுத்துங்கள் என்று சொல்லி இருந்தாலும் கூட, சம்பந்தன் உட்பட மாவை சேனாதிராசா கூறியிருந்தார்கள்.

13 ஆம் திருத்தம் மாத்திரம் அமுல்படுத்துவது தொடர்பில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக சில விடயங்களில் சிலர் 13 ஆம் திருத்தச் சட்டத்தில் உள்வாங்கப்படாததை இப்படியான பல விடயங்களை நாம் உள்ளடக்க வேண்டும் எனக் கூறிய காரணத்தால் இதுவரை சில பாகம் மட்டும் உள்ளது.

இந்த அறிக்கை முடிவுக்கு வந்ததன் பின் இந்தியப் பிரதமருக்கும் இந்திய நாட்டினருக்கும் கையளிக்கப்பட்ட பின் நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நான் கருத்தை எதிர்வரும் காலங்களில் தெரிவிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

# அரச நிறுவனங்களின் செலவினங்களை குறைக்குமாறு நிதி அமைச்சர் உத்தரவு

அரச நிறுவனங்களின் செலவினங்களை மேலும் குறைக்குமாறு அனைத்து அமைச்சுக்களுக்கும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, புதிய பணியாளர்களை இணைப்பதைத் தவிர்க்கவும், புதிய கட்டடங்கள் கட்டுவதை உடனடியாக நிறுத்தவும், எரிபொருள் மற்றும் தொலைபேசி கட்டணத்தை குறைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் சில அரச நிறுவனங்கள் அரசைச் சார்ந்திருப்பதை நிறுத்த வேண்டும் எனவும் நிதி அமைச்சர் பரிந்துரைத்துள்ளார்.

அமைச்சின் ஊழியர்கள், அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலாளர் உட்பட ஏனைய அதிகாரிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 5 லீற்றர் எரிபொருள் கொடுப்பனவுகளைக் குறைப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# விலங்குகள் நலச் சட்டமூலம் அமைச்சரவை பச்சைக்கொடி

விலங்குகள் நலச் சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும், விலங்குகள் நலசட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்பிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம் திகதி விலங்குகள் நலச் சட்டமூலத்தை உருவாக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இலங்கையின் சட்ட வரைவாளரால் உருவாக்கப்பட்ட சட்டமூலத்துக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பொலிஸாரின் ஏற்பாட்டில் மாபெரும் சிரமதானம்!

## வவுனியாவில் நடந்தது





வன்னிப்பிராந்தியபிரதிப்பொலிஸ்மா அதிபர் டி .தம்மிக்க விஜயசிறியின் ஆலோசனைக்கு அமைவாக தைத் திருநாளை முன்னிட்டு வவுனியா நகரில் மாபெரும் சிரமதானம் ஒன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது .

தைத்திருநாளை முன்னிட்டு நகரைத் தூய்மையாக வைத்திருப்போம் எனும் கருப் பொருளில் வவுனியா பழைய பஸ் நிலையத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டுள்ள சிரமதானம் கண்டிவீதி, ஹொறவப்பொத்தான வீதி , ரயில் நிலைய வீதி , மன்னார் வீதி போன்ற வீதிகளிலிருந்து ஆரம்பமாகி இடம்பெற்றது .

வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி , வவுனியா வர்த்தகர் சங்கத்தினர், அரச உத்தியோகத்தர்கள், சமூக ஆர்வலர்கள், ஓட்டோ சங்கம் , வர்த்தகர்கள், பொது மக்கள், பொலிஸார் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.01.2022இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டாவின் கொள்கை விளக்க உரை குறித்து 19, 20ஆம் திகதிகளில் விவாதம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

குறித்த விவாதத்தை எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறுகின்றது.

இது தொடர்பில் விவாதம் நடத்துவதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை எதிரணியால் முன் வைக்கப்படவுள்ளது.



# தேவை ஏற்பட்டால் மட்டும் மின்வெட்டு

## அரசு அறிவிப்பு

தேவை ஏற்பட்டால் மாத்திரம் மின்வெட்டு அமுல்படுத் தப்படும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவிய லாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக் களத்தில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

முன்னாயத்த நடவடிக்கையாக இலங்கை மின்சார சபையால் மின் வெட்டுத் தொடர்பான அட்டவணை வெளி யிடப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சம்பிக்கவிடம் வைத்திய அறிக்கை கோரிய கொழும்பு மேல் நீதிமன்றம்



முன்னாள் அமைச்ச ரும் ஐக்கிய மக்கள் சக்தி யின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் உடல் நிலையை ஆராய்ந்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கு மாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளது.

இராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் போலி சாட்சியங்களைத் தயாரித்து சாட்சியங் களை மறைத்தமை தொடர்பில் அமைச்சர் பாட்டலி சம் பிக்க ரணவக்க உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டபோது பிரதிவாதியான பாட்டலி சம்பிக்க ரணவக்க நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

# அரச நிறுவனங்களின் செலவினங்களை மேலும் குறைத்துக்கொள்ள நடவடிக்கை



அமைச்சுக்கள், திணைக்களங் கள் உள்ளிட்ட அரச நிறுவனங்க ளின் செலவினங்களை மேலும் குறைத்துக்கொள்வதற்கு நடவ டிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கேட்டுக்கொண் டுள்ளார்.

அது தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சரவை அந்தஸ்துள்ள அனைத்து அமைச் சர்களுக்கும் அறிவித்துள்ளார் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

வரவு - செலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள அரசின் செலவு களை முகாமைத்துவப்படுத்தும் மட்டுப்படுத்தல்களுக்கு மேலதிக மாக இவ்வாறு அரச நிறுவனங் களின் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சரவைப் பத்திரம் ஒன் றைச் சமர்ப்பித்து அதன்மூலம் நிதி அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனவும் அந்த வட் டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் பொருளாதார நெருக்கடி யைக் கவனத்தில்கொண்டு செல வினங்களைக் குறைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வரும் நிலையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச் சரவைப் பத்திரம் மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

கடந்த வருடமும் அரசின் செல வினங்கள், வீண்விரயங்கள் குறைக்கப்பட்டு பல கோடி ரூபா சேமிக்கப்பட்டது தெரிந்ததே. ஜனா திபதியும் தனது செலவினங்களைக் குறைத்திருந்தார்.

# மாதகலில் படகு விபத்தில் மீனவர் பரிதாப உயிரிழப்பு

## கடற்படையினர் மீது குற்றச்சாட்டு



(இ.கலையமுதன்)

யாழ்., மாதகல் கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற மீனவர் சடலமாகக் கரை ஒதுங்கியுள்ளார். அவர் சென்ற படகு சேதமடைந்து கடலில் கவிழ்ந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மாதகல், குசுமாந்துறையைச் சேர்ந்த திலீபன் என அழைக்கப்படும் எட்வெர்ட் மரியசீலன் (வயது - 31) என்ற மீனவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த மீனவர் தொழிலுக்குச் சென்ற நிலையில் மாதகல் கடற்பரப்பில் 200 மீற்றர் தூரத்தில் படகு கவிழ்ந்து காணப்பட்டுள்ளது. அதையடுத்து உள்ளூர் மீன வர்களால் படகு மீட்கப்பட்டதுடன் உயிரிழந்த மீனவரின் சடலமும் மீட்கப்பட்டது.

மீனவரின் படகு மீது கடற்படையினரின் படகு மோதியே விபத்து ஏற்பட்டுள்ளது என உள்ளூர் மீனவர் கள் குற்றச்சாட்டும் நிலையில் கடற்படையினர் அதனை மறுத்துள்ளனர்.

# பொங்கலை முன்னிட்டு யாழில் வர்த்தக சந்தை நேற்று ஆரம்பம்





(இ.கலையமுதன்)

தைப்பொங்கலை முன்னிட்டு பற்றிக் துணிகள் மற் றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம் நடத்தும் 2022ஆம் ஆண்டுக்கான மாபெரும் வர்த்தக சந்தை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பமானது.

வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந் தும் தொழில் முனைவோர் உற்பத்தியாளர்கள் தங்க ளது உற்பத்திப் பொருள்களைக் காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தியிருந்தனர். இந்த வர்த்தகசந்தை இன் றும் நாளையும் இரு தினங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, பற்றிக் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர்,

யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப் பிள்ளை மகே சன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ் வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பற்றிக் கைத்தறி ஆடைகள், கருப்பட்டி, ஒடியல் உள் ளிட்ட பனை உற்பத்திப் பொருள்கள், பெறுமதி சேர்க்கப் பட்ட தென்னை உற்பத்திப் பொருள்கள், நல்லெண் ணெய், ஊதுபத்தி, பாரம்பரிய உணவு உற்பத்திகள், மட் பாண்ட உற்பத்திகள், கைப்பணிப் பொருள்கள் உள் ளிட்ட உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் சந்தைப்படுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இடமாற்றம் இரத்து!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணம் மாவட்ட நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் 7 பேருக்கும் வழங்கப்பட்ட இடமாற்றம் இரத்துச் செய் யப்பட்டது.

இலங்கை முழுவதும் அரச சேவை கள், மாகாண சபைகள் மற்றும் உள் ளூராட்சி அமைச்சின் கீழ் பணியாற்றும் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கு 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் முத லாம் திகதி முதல் வருடாந்த இடமாற்றம் என 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி கடிதம் மூலம் அறிவிக் கப்பட்டது.

இந்த இடமாற்றங்களே தற்போது இதே அமைச்சால் 2022 ஜனவரி 10 ஆம் திகதி கடிதம் மூலம் இடைநிறுத்தப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சேவையாற்றிய வர்கள் அரசியல் நோக்கம் கொண்டு இட மாற்றம் செய்யப்பட்டனர் என்று கூறப் பட்டதோடு பலரும் மேன்முறையீடு செய் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியில் தன் உயிரை மாய்க்க முயன்ற மாணவனுக்கு எதிராக வழக்கு

மாமன் கண்டித்ததால், தன் உயிரை மாய்க்க முயன்ற மாணவனுக்கு எதிரா கப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து ள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணம், சாவகச்சேரி - மட்டுவில் பகுதியை சேர்ந்த 14 வயதுடைய மாண வன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பட்டாசு வெடிகளை வாங்கி வெடிக்க வைத்துள் ளார். அதைக் கண்ணுற்ற மாணவனின் மாமன் மாணவனைக் கண்டித்துள்ளார்.

அதனால் ஆத்திரமுற்ற மாணவன் தோட்டத்துக்குச் சென்று கிருமி நாசி னியை எடுத்து அருந்தியுள்ளார். அதை அறிந்த குடும்பத்தினர் மாணவனை சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்த்துள்ளனர்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவன் தற்போது தேறி வரும் நிலையில், தனது உயிரை மாய்க்க முயன்ற குற்றத்துக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஜனவரி 31 வரை இரவு ஊரடங்கு நீடிப்பு தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிக்கை

தமிழகத்தில் ஜனவரி 31ஆம் திகதி வரை இரவு ஊரடங்கு நீடிக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதை தொடர்ந்து கூடுதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. பொங்கல் பண்டிகை நாட்களான 14.01.2022 முதல் 18.01.2022 வரை அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படாது.

பொங்கல் பண்டிகைக்காக வெளியூர் செல்லும் பொதுமக்களுடைய நலன் கருதி பொதுப் போக்குவரத்து பஸ்களில் அனுமதிக்கப்பட்ட இருக்கைகளில் 75 வீதம் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இரு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ள கல்வி நிலையங்களும் இம்மாதம் 31ஆம் திகதி வரை தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





## கடன் தர மறுத்த வங்கியை தீ வைத்துக் கொளுத்திய நபர்

கர்நாடக மாநிலம் ஹாவேரி மாவட்டத்தை சேர்ந்த 33 வயதான வசிம் முல்லா என்பவர் பொதுத்துறை வங்கி ஒன்றுக்குத் தீவைத்துக் கொளுத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர் ஹெடிகொன்டா கிராமத்தில் உள்ள பொதுத்துறை வங்கி ஒன்றில் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார். ஆயினும், இவரது விண்ணப்பத்தைப் பரிசீலித்த வங்கி மேலாளர், இந்த விண்ணப்பத்தை நிராகரித்து கடன் தர மறுத்துவிட்டார்.

இதனால், ஆத் திரம் அடைந்த வசிம் முல்லா, வங்கிக் கண்ணாடிகளை உடைத்து, வங்கிக்குள் நுழைந்து பெட்ரோல் ஊற்றி தீ வைத்துள்ளார்.

இதனால் வங்கியில் இருந்த பெரும்பாலான பொருள்களும் பத்திரங்களும் தீக்கிரையாகியுள்ளன.

விடயமறிந்து பொதுமக்கள் வருவதை பார்த்துவிட்டு தப்பி ஓட முயற்சி செய்த முல்லாவை அப்பகுதி மக்கள் பிடித்து, அடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

முல்லா மீது காகிநல்லி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங்கிற்கு கொரோனா தொற்று உறுதியானதாக தகவல்



இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கடந்த இரு வாரங்களாக கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த டிசெம்பர் மாதம் முதன்முதலாக நாட்டில் இருவருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதிசெய்யப்பட்ட நிலையில், கொரோனாப் பரவலும் அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் கொரோனாவால் 1,59,632 பேர் பாதிக்கப்பட்டதாகத் தரவுகள் தெரிவித்த நிலையில், நேற்று புதிதாக 1,79,723 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இது நேற்று முன்தினப் பாதிப்பைவிட 12.6 சதவீதம் அதிகமாகும்.

இந்த நிலையில், தனக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது டுவிட்டர் பக்கத்தில் தகவலைப் பகிர்ந்துள்ளார். அதில் அவர், குறைவான பாதிப்புகளுடன் எனக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது நான் வீட்டுத் தனிமையில் இருக்கிறேன். சமீபத்தில் என்னை நேரில் சந்தித்தவர்கள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்வதுடன், கொரோனாப் பரிசோதனையையும் செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன், என்று அவர் கூறியுள்ளார்.

## கொரோனாப் பரவல் அதிகரிப்பின் எதிரொலி இந்தியப் பிரதமரின் தமிழகப் பணயம் இரத்து



தமிழகத்தில் கொரோனா பரவல் அதிகரித்துவருவதால், ஜனவரி 12 ஆம் திகதி நடக்கவிருந்த இந்தியப் பிரதமர் மோடியின் தமிழகப் பயணம் இரத்தாகியுள்ளது.

ஏற்கெனவே மோடியின் புதுச்சேரிப் பயணமும், மதுரையில் பா.ஜ.க. சார்பில் நடக்கவிருந்த ‘மோடி பொங்கல்’ நிகழ்ச்சியும் ரத்துச் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும், அவரின் தமிழக பயணம் குறித்து எவ்வித அறிவிப்பும் வெளியாகாமல் இருந்தநிலையில், தற்போது அது தொடர்பாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் நேற்றை தினம் ஒரேநாளில் கொரோனா பாதிப்பு 13ஆயிரத்தை ஐக் கடந்து பதிவாகியிருந்ததாலும், இனிவரும் நாள்களில் இன்னும் பாதிப்பு அதிகரிக்கலாம் என்பதாலும் பிரதமரின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை எடுப்பட்டிருக்கும் என கருதப்படுகிறது.

அன்றைய தினம் இந்தியப் பிரதமர் ஆரம்பித்து வைப்பதாக இருந்த 11 அரசு மருத்துவக் கல்லூரிகளையும் காணொலி முறையில் திறந்துவைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் செம்மொழி மத்திய தமிழாய்வு நிறுவனத்திற்கான புதிய கட்டடத்தையும் அவர் திறந்துவைக்கவிருக்கிறார். இந்தத் தமிழாய்வு நிறுவனம், தற்போது சென்னை தரமணியில் தற்காலிகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இரு தவணைத் தடுப்பூசிச் சான்றிதழ் இல்லாத பயணிகளுக்கு ரயிலில் அனுமதி மறுப்பு

இரண்டு தவணைக் கொரோனா தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழ் இல்லாமல் வந்த பயணிகளுக்கு ரயில் பயணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சென்னையில் புறநகர் ரயில்களில் பயணிப்பதற்கு இரண்டு தவணைக் கொரோனாத் தடுப்பூசிகளையும் செலுத்தியதற்கான சான்றிதழை வைத்திருப்பதும், முகக்கவசம் அணிவதும் கட்டாயம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டுப்பாடுகள் வரும் 31 ஆம் திகதி வரை அமலில் இருக்கும் எனவும் தெற்கு ரயில்வே அமையம் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் இரு தவணைக் கொரோனா தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழ் இல்லாமல் வந்த 2,177 பயணிகளுக்கு ரயில்களில் பயணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டதாகவும், முகக்கவசம் அணியாத 31 நபர்களிடம் மொத்தமாக 15ஆயிரத்து 500 ரூபா அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ள தாகவும் தெற்கு ரயில்வே நிர்வாகம் இன்று காலையில் அறிவித்துள்ளது.

